இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 403
சனி, 08 ஆகஸ்ட், 2026 | பக்கங்கள் 21
www.ilakku.org















# லலித், குகன் காணாமலாக்கப்பட்ட வழக்கில் கோட்டாபயவிடம் சாட்சியம் பெற உத்தரவு



காணாமலாக்கப்பட்ட மனித உரிமை செயற்பாட்டாளர்களான லலித் மற்றும் குகன் ஆகியோரின் வழக்கில் பிரதிவாதியான முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சவிற்கு யாழ். நீதவான் நீதிமன்றம் விசேட உத்தரவொன்றை பிறப்பித்துள்ளது. பாதுகாப்பு காரணங்களை சுட்டிக்காட்டி யாழ் நீதவான் நீதிமன்றில் முன்னிலையாக தவறிய கோட்டாபய ராஜபக்சவிடம் சாட்சியம் பெரும் நோக்கில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கோட்டாபய ராஜபக்ச எதிர்வரும் செப்டம்பர் 29ஆம் திகதி கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் அன்றைய தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையாகி, இணையவழி மூலமாக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்திற்குச் சாட்சியமளிக்க அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2011 டிசம்பர் 10 அன்று சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒருங்கிணைத்துக்கொண்டிருந்த வேளையில், லலித்குமார்

தொடர்ச்சி: பக்கம் 18

## இலங்கையின் வெவ்வேறு சிறைச்சாலைகளில் அமைதியின்மை: சிலர் உயிரிழப்பு



இலங்கையின் வெவ்வேறு சிறைச்சாலைகளில் நேற்றிரவு முதல் பதற்றமான சூழல் நிலவி வருகின்றது. இதன் காரணமாக சில சிறைச்சாலைகளில் கைதிகளின் உயிரிழப்பு சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இதன்படி, நீர்கொழும்பு, பல்லன் சேன திறந்தவெளி சிறைச்சாலை யில் கைதிகளினால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதை அடுத்து கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலையில் அமைதியின்மையைக் கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், நிலைமையை கட்டுப்படுத்த காவல்துறை, காவல்துறை விசேட அதிரடிப்படை, கலகத் தடுப்புப் பிரிவு மற்றும் வான்படை ஆகியன வரவழைக்கப்பட்டுள்ளன.

அதேநேரம், கொழும்பு மெகசின் சிறைச்சாலையில் நேற்றிரவு ஏற்பட்ட அமைதி

தொடர்ச்சி: பக்கம் 19

## அரசியலமைப்பின் 22வது திருத்தச் சட்டம்: வர்த்தமானி வெளியீடு



உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயது மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை முன் மொழிந்து, அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலம் அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரின் உத்தரவுக்கமைய நேற்று (07) வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி, உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயது 67 ஆக உயர்த்தப்படவுள்ளதுடன், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயது 65 ஆக நிர்ணயிக்கப்படவுள்ளது.

அத்துடன், பிரதம நீதியரசர் தனது 67ஆவது வயதை அடையும் போது அல்லது 6 ஆண்டுகள் பதவிக் காலத்தை நிறைவு செய்யும் போது ஓய்வுபெறுவார் என்றும் இந்தச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 18

# ஏமன் படைகள் மீதான ஹூதி தாக்குதல்களில் 30 பேர் பலி



ஏமனின் ஹத்ரமௌத் மற்றும் மரிப் மாகாணங்களில் உள்ள அரசு இராணுவ முகாம்கள் மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களில் குறைந்தது 30 அரசுப் படை வீரர்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 15 பேர் காயமடைந்தனர் என்று அரசுத் தரப்பு வட்டாரங்கள் அல் ஜசீராவிடம் தெரிவித்தன. ஏமனின் அவசரக்காலப் படைகளால் (Emergency Forces) நிர்வகிக்கப்படும் முகாம்கள் உட்பட இராணுவத் தளங்கள் மீது வியாழக்கிழமை(6) நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்கள், நாட்டின் உள்நாட்டுப் போரில் கடந்த சில ஆண்டுகளில் நிகழ்ந்த மிக மோசமான தாக்குதல்களாகும். சமீபத்திய வாரங்களில் ஏமனில் அதிகரித்துள்ள வன்முறையைத் தொடர்ந்து இத்தாக்குதல்கள் நடந்துள்ளன.

ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட இத்தாக்குதல்களால் “நூற்றுக்கணக்கானோர்” உயிரிழக்கவோ அல்லது காயமடையவோ நேரிட்டதாக ஹூதி இராணுவப் பேச்சாளர் யஹ்யா சரீ தெரிவித்தார். ஹூதிகளுக்கு எதிராகத் தாங்கள் நடத்திய தாக்குதல்களுக்குப் பதிலடியாகவே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகக் கூறி, ஏமன் இராணுவம் இத்தாக்குதல்களை உறுதிப்படுத்தியது.

ஹத்ரமௌத்தில் உள்ள அல்-தினியா மற்றும் அல்-அப்ர், மற்றும் மரிப்பில் உள்ள அல்-ரூக் ஆகிய இடங்களை இலக்காகக் கொண்டு, மரிப்பிற்கு வடக்கே உள்ள அல்-ஜவ்ஃப் மாகாணத்திலிருந்து ஹூதிகள்

தொடர்ச்சி: பக்கம் 19

## முகநூல் நிறுவனம் மீது 567 மில்லியன் டொலர் அபராதம்



அமெரிக்காவின் நியூ மெக்சிகோவில் உள்ள ஒரு நீதிபதி, குழந்தைகளின் மன நலத்தைப் பாதித்ததற்கு முகநூல் நிறுவனமே காரணம் என்று கண்டறிந்ததைத் தொடர்ந்து, முகநூல் மற்றும் இன்ஸ்டாகிராமின் உரிமையாளரான மெட்டா நிறுவனம் 567 மில்லியன் டொலர் செலுத்த வேண்டும் என்றும், அம்மாநிலத்தில் உள்ள இளம் பயனர்களுக்காகத் தனது தளங்கள் செயல்படும் விதத்தை மாற்ற வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

வியாழக்கிழமை வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பு, சமூக ஊடக நிறுவனத்திற்கு எதிரான ஒரு முக்கிய வழக்கின் இரண்டாம் கட்டத்தில் வந்துள்ளது. முகநூல் மற்றும் இன்ஸ்டாகிராமின் பாதுகாப்பை இளம் பயனர்களுக்குத் தவறாகக் கூறி, மெட்டா நிறுவனம் மாநிலத்தின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறியுள்ளதாக மார்ச் மாதம் நடுவர் குழு கண்டறிந்தது. இந்த ஆண்டின் தொடக்கத்தில், அந்நிறுவனம் 375 மில்லியன் டொலர் இழப்பீடு செலுத்த வேண்டும் என்று நடுவர் குழு உத்தரவிட்டிருந்தது.

இந்த சமீபத்திய தீர்ப்பிற்குப் பிறகு, நீதிபதி பிரையன் பீட்ஷெய்ட், இந்தத் தொகையின் பெரும்பகுதியான 420 மில்லியன் டொலர், இளைஞர்களுக்கான சிகிச்சை சேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் என்று கூறினார். மீதமுள்ள தொகை, அடுத்த ஐந்து ஆண்டுகளில் விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள், பரிசோதனை சேவைகள் மற்றும் பிற செலவுகளுக்குச் செல்லும்.

மெட்டா நிறுவனத்தின் அடிமையாக்கும் அம்சங்களைக் கட்டுப்படுத்துதல், வயது சரிபார்ப்பை மேம்படுத்துதல், மற்றும் இயல்புநிலை தனியுரிமை அமைப்புகள் மற்றும் நெருக்கமான மேற்பார்வையின் மூலம் குழந்தைப் பாலியல் சுரண்டலைத் தடுத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட அடிப்படை மாற்றங்களை அந்நிறுவனத்தில் விதிக்க வேண்டும் என்று அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள் நீதிபதியிடம் கோரியிருந்தனர்.

இந்தத் தீர்ப்பின் மூலம் மெட்டாவின் தளங்களின் தோற்றம் மாறக்கூடும். உதாரணமாக, ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் நிறுவனங்கள் தங்களின் பாதுகாப்பு அம்சங்கள், சிறந்த நடைமுறைகள் மற்றும் பொருத்தமற்ற கருத்துகளைக் கையாள்வதற்கான கருவிகளைத் தெளிவாக விளக்கும் பதாகைகள் மற்றும் தகவல் திரைகளை உருவாக்கி, அவற்றைத் தவறாமல் காட்சிப்படுத்த வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

அந்த மாற்றங்களும், நியூ மெக்சிகோவில் நடத்தப்படும் ஒரு கல்விப் பிரச்சாரமும் மாநிலத்தின் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு

தொடர்ச்சி: பக்கம் 18

## விண்ணை முட்டும் எரிபொருள் விலைகள்




அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதல் அமெரிக்கா முழுவதும் எரிபொருள் விலைகள் உயர்வாகவே நீடிக்கக் காரணமாக அமைவதாக ‘தி அட்லாண்டிக்’ (The Atlantic) இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. விரைவில் போர்நிறுத்தம் ஏற்பட்டாலும், எரிபொருள் விலைகள் உடனடியாகக் குறையும் என்று வாகன ஓட்டிகள் எதிர்பார்க்கக்கூடாது எனப் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். இந்த மோதல் தொடங்கியதிலிருந்து, அமெரிக்காவில் பெட்ரோலின் சராசரி விலை தொடர்ந்து ஒரு கேலனுக்கு 3.50 டாலருக்கும் அதிகமாகவே இருந்து வருகிறது; மோதல்கள் மீண்டும் தீவிரமடைந்த பிறகு, அது ஒரு கேலனுக்கு 4.00 டாலருக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

எரிபொருள் விலை உயர்வு அமெரிக்காவில் மிக முக்கியமான அரசியல் விவகாரங்களில் ஒன்றாக மாறியுள்ளது. ஒரு புதிய கருத்துக்கணிப்பின்படி, சுமார் 75% அமெரிக்கர்கள் எரிபொருள் விலை உயர்வுக்கு ட்ரம்ப் தான் காரணம் என்று

தொடர்ச்சி: பக்கம் 11

## பென்டகன் கொள்கைத் தலைவருக்கு சீனா அனுமதி மறுப்பு



அமெரிக்காவின் பாதுகாப்பு தலைமையகமான பென்டகன் கொள்கைத் தலைவர் எல்பிரிட்ஜ் கோல்பி, பெய்ஜிங்கிற்கு ஒரு அதிகாரப்பூர்வப் பயணத்தை ஏற்பாடு செய்ய பல மாதங்களாக முயற்சி செய்து வருகிறார், ஆனால் சீனா இதுவரை அவரை அழைக்க மறுத்துவிட்டது.

இதற்குக் காரணம், ட்ரம்ப் நிர்வாகம் தைவானுக்கு 11 பில்லியன் டாலர் மதிப்பிலான ஆயுதங்களை விற்பனை செய்ததன் மீதான பெய்ஜிங்கின் கோபமும், பரந்த அமெரிக்க-சீனப் பதட்டங்களுமே ஆகும்.

நீண்ட காலமாக சீனாவுக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டவரான கோல்பி, இந்தப் பயணத்தை—குறிப்பாக சீனாவின் தேசியப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் ஆற்றும் உரையை—இராணுவ உறவுகளை நிலைப்படுத்தவும், அமெரிக்கப் பாதுகாப்புக் கொள்கையை விளக்கவுமான ஒரு வாய்ப்பாகக் கருதுகிறார்.

தொடர்ச்சி: பக்கம் 11

## சீரற்ற வானிலையால் மலையகம் ஸ்தம்பித்தது: மக்கள் மீதான அழுத்தம் பாராளுமன்றில் வெளிப்பட்டது

கடந்த சில தினங்களாக நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக மத்திய மற்றும் சப்ரகமுகவ மாகாணங்கள் வெகுவாக பாதிக் கப்பட்டுள்ளன. குறிப்பாக இந்த இரண்டு மாகாணங்களிலும் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களால் 8 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அண்மைய அறிக்கையின்படி, மத்திய மாகாணத்தில் 3,289 குடும்பங்களைச் சேர்ந்த 12,983 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



அத்துடன் சப்ரகமுவ மாகாணத்தில் 735 குடும்பங்களைச் சேர்ந்த 2935 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதிக பாதிப்பு பதிவான மத்திய மாகாணத்தில் 8 உயிரிழப்பு சம்பவங்கள் பதிவானதுடன் 392 வீடுகள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்களது இருப்பிடங்களை இழந்து தற்காலிக முகாம்களில் தங்கவைக் கப்பட்டுள்ளனர். மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் ஏழு உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. அவற்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மண்சரிவில் சிக்கி உயிரிழந்தனர். அத்துடன் கண்டி மாவட்டத்தில் ஒரு உயிரிழப்பு சம்பவம் பதிவாகியுள்ளது.



அதேநேரம் நுவரெலியா மாவட்டத்தில் 7,572 பேரும் கண்டி மாவட்டத்தில் 5,371 பேரும் பாதிக்கப்பட்டதுடன் சப்ரகமுவ மாகணத்தின் கேகாலை மாவட்டத்தில் 448 பேரும் இரத்தினபுரி மாவட்டத்தில் 2487 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. குறிப்பாக மலையகத்தின் நான்கு மாவட்டங்களுக்கு தொடர்ந்தும் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த ஆண்டு “டித்வா” புயல் காரணமாக அதிக அளவில் பாதிக்கப்பட்ட மலையக பகுதியில் தற்போது நிலவும் சீரற்ற வானிலை மேலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.




பல பகுதிகளில் வீதி போக்குவரத்துகள்தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளன. பல இடங்களில் வீதிகள் தாழிறங்கி உள்ளதுடன் மலைப்பாங்கான பகுதிகளும் தாழிறங்கி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தி மக்களை மீளாத துயரத்தில் ஆழ்த்தியுள்ளதாக மாவட்ட செயலாளர் துசாரி தென்னகோன் தெரிவித்தார். அதிக மழை வீழ்ச்சி காரணமாக மலையகத்தின் பிரதான நீர்த்தேக்கங்களான கொத்மலை, காசல்ரி மற்றும் விமலசுரேந்திர உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் அனைத்து வான்கதவுகளும் திறக்கப்பட்டன.

அதிகளவான மழை வீழ்ச்சி மற்றும் மண்சரிவு சம்பவங்கள் காரணமாக மாணவர்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு மத்திய மாகாணத்தின் நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களில் பெரும்பாலான பாடசாலைகள் மூடப்பட்டன. பல பகுதிகளில் பாடசாலை மாணவர்கள் தங்களது பாடசாலை உடைமைகளை இழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நுவரெலியா மாவட்டத்தில் சில இடங்களில் 300 மில்லிமீட்டருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளன.

தொடர்ச்சி: பக்கம் 13

## ஆசிரியர் தலையங்கம் | 08 ஆகஸ்ட், 2026

### 2009இல் ஈழத்தமிழின அழிப்பை அனுமதித்தவருக்கு 2026 இல் பரிகாரம் செய்யக் கஜேந்திரகுமார் சந்தர்ப்பம்

கடந்த வாரத்தில் 2008 முதல் 2011 வரை இந்தியாவின் சிறிலங்காவுக்கான பிரதித் தூதுவராகப் பணிப்பொறுப்பில் இருந்த விக்ரம் மிஸ்ரி அவர்கள் இந்திய வெளிவிவகாரச் செயலாளராக இலங்கைக்கு உத்தியோகபூர்வமாக வந்திருந்தார். அனைத்துலக அரசியல் பொருளாதார பாதுகாப்பு மாற்றங்களுக்கு முகங்கொடுப்பதற்கு ஒவ்வொரு நாடும் தனது கடல் வான் நிலப்பகுதிகளில் மற்றைய நாடுகளுடன் இணைப்புக்களை உருவாக்கி தங்கள் கூட்டாண்மை பங்காண்மை முயற்சியாக இவற்றை எதிர்கொள்ள முயற்சிப்பது சமகால அரசியல் போக்காக உள்ளது. இதன் பின்னணியில் இந்திய வெளிவிவகாரச் செயலாளரின் சிறிலங்காவுக்கான வருகை காலத்தின் தேவையாக இருந்தாலும் இந்த வருகை ஈழத்தமிழரின் இருப்பின் இறைமையை எவ்வாறு மாற்றும் என்பது ஈழத்தமிழரின் தாயகத்திலும் அனைத்து உலக வாழ்விடங்களிலும் ஈழத்தமிழரின் அக்கறையாக அமைவதும் தவிர்க்க இயலாதவொன்றாகவே உள்ளது. இதனை உறுதி செய்யும் வகையில் விக்ரம் மிஸ்ரி அவர்களும் ஈழத்தமிழர்களின் சிறிலங்காப் பாராளுமன்றப் பிரதிநிதிகளைச் சந்திப்பதையும் தனது வருகைக்கான திட்டத்தில் இணைத்துள்ளமை அமைந்தது.

மேலும் 2009 ஆம் ஆண்டு சிறிலங்காவின் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பு நேரத்தில் இந்தியாவின் சிறிலங்காவுக்கான பிரதித் தூதுவராக இருந்தவர் விக்ரம் மிஸ்ரி தற்போது அவர் இந்திய வெளிவிவகாரச் செயலாளராக இலங்கைக்கு வருகை தந்த இக்காலகட்டத்தில் 1987 ஆகஸ்ட் 4 திகதியன்று ஈழத்தமிழர்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் நாளாந்த வாழ்வுக்கும் பாதுகாப்பாக 1972 முதல் 15 ஆண்டுகள் இருந்த ஈழத்தமிழர்களின் ஆயுதங்களை சுதுமலையில் பெற்றுக் கொண்ட இந்தியா அன்றுமுதல் ஈழத்தமிழர்களின் பாதுகாப்புக்கான பொறுப்பையும் ஏற்றது என்ற வரலாற்று மாற்றத்தை இலக்கு மீள்நினைவு கூர விரும்புகின்றது.

இதனை தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தனது சுதுமலைப் பிரகடன உரையில் எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதனை அவரது மொழியிலேயே இங்கு மீள்பதிவு செய்வது ஈழத்தமிழர்களின் பாதுகாப்பு தொடர்பாக இந்தியாவுக்கு உள்ள வரலாற்றுப் பொறுப்பை உணர உதவும் என்பது இலக்கின் எண்ணம்.

“நாம் இந்த ஆயுதங்களை ஒப்படைக்கும் கணத்திலிருந்து எமது மக்களாகிய உங்களின் பாதுகாப்புப் பொறுப்பையும் இந்தியாவிடம் ஒப்படைக்கின்றோம். ஈழத் தமிழர்களின் ஒரே பாதுகாப்பாக இருந்து வந்த இந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடமிருந்து பெற்றுக்கொள்வதன் மூலம் மக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறது. ஆயுதக் கையளிப்பு என்பது இந்தப் பொறுப்பு மாற்றத்தையே குறிக்கிறது.

நாம் ஆயுதங்களைக் கையளிக்காது போனால் இந்திய இராணுவத்துடன் மோதும் துர்ப்பாக்கியமான சூழ்நிலை ஏற்படும். இதை நாம் விரும்பவில்லை. இந்தியாவை நாம் நேசிக்கின்றோம். இந்திய மக்களை நாம் நேசிக்கின்றோம். இந்திய வீரர்களுக்கு எதிராக நாம் ஆயுதங்களை நீட்டத் தயாராக இல்லை. எமது எதிரியிடமிருந்து எம்மைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய இராணுவ வீரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். நாம் ஆயுதங்களை அவர்களிடம் கையளிப்பதிலிருந்து ஒவ்வொரு ஈழத்தமிழனினதும் உயிருக்கும் பாதுகாப்புக்கும் இந்திய அரசே பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதை நான் இங்கு இடித்துக்கூற விரும்புகின்றேன். இந்தியாவின் இந்த முயற்சிக்கு நாம் ஒத்துழைப்பு தருவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் அவர்களுக்கு வழங்குவோம். ஆனால் இந்த ஒப்பந்தத்தால் தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுமென நான் நினைக்கவில்லை. சிங்கள இனவாதப் பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கிவிடும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

தமிழீழத் தனியரசே தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு. தமிழீழ இலட்சியத்திற்காகவே நான் தொடர்ந்து போராடுவேன் என்பதையும் நான் இங்கு திட்டவட்டமாக என் மக்களாகிய உங்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை. எமது இலட்சியம் வெற்றிபெற வேண்டுமெனில் எமது மக்களாகிய உங்களின் ஏகோபித்த ஆதரவு என்றும் எமக்கு இருக்க வேண்டும். தமிழீழ மக்களின் நலன் கருதி இடைக்கால அரசில் பங்குபெற அல்லது தேர்தலில் போட்டியிட வேண்டிய சூழ்நிலை எமது இயக்கத்திற்கு ஏற்படலாம். ஆனால் நான் எந்தக் காலகட்டத்திலும் தேர்தலில் பங்குபற்றப் போவதில்லை. முதலமைச்சர் பதவியையும் ஏற்கப் போவதில்லை. இதை நான் மிகவும் உறுதியாக உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன்.” இதுவே தேசியத் தலைவரின் அன்றையச் செய்தி. ஆனால் இந்தியாவின் செயற்பாடு ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை எவ்வாறு 1987 முதல் 2009 வரை 22 ஆண்டுகள் இருந்தது என்பது உலக வரலாறாக உள்ளது.

கடந்த வாரத்தில் ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் அவர்களது கட்சிகள் மற்றும் கூட்டணிகளின் சார்பாகச் சந்தித்தனர். அந் நேரத்தில் சிறிலங்கா அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தால் அதனுடன் சேர்க்கப்பட்ட மாகாணசபைகளுக்கான தேர்தலைச் சிறிலங்கா அரசாங்கம் விரைவில் நடத்த இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்கின்ற பழைய பல்லவியைக் கோஸ்டி கானமாக விக்ரம் மிஸ்ரியிடம் பாடி மகிழ்ந்தனர். கூடவே 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இந்தியா சிறிலங்காவுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்கின்ற வேண்டுகோளையும் மறுபடியும் முன்வைத்தனர். இதனை எவ்வாறு இந்தியா இன்றுள்ள உலக அரசியல் முறைமையுள் சிறிலங்காவுக்கு நிபந்தனைகளை விதித்து நடைமுறைப்படுத்தும் என்பதும் இன்றுள்ள ஈழத்தமிழரின் தேசிய பிரச்சினைக்கான தீர்வாக இது எவ்வாறு அமையும் என்பதும் இந்த ஈழத்தமிழ் அரசியல்வாதிகளுக்கு மட்டும்தான் வெளிச்சம் என்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

39 ஆண்டுகளுக்கு முன்பு கையொப்பமாகிய இந்திய சிறிலங்கா ஒப்பந்தத்தின் அடிப்படையில் சிறிலங்கா சனநாயக சோசலிசக் குடியரசின் 14.11.1987ம் திகதி 13ஆவது திருத்தத்தால் நிதி என்னும் அரசியலமைப்பின் 17ஆவது பிரிவில் ‘அ’ பிரிவாகச் சேர்க்கப்பட்ட மாகாணசபைகளைத் தாபித்தல் என்னும் பகுதியின் மூலம் அரசியலமைப்பாகக் கட்டமைக்கப்பட்ட மாகாணசபைகள் சிறிலங்கா தனது ஒன்பது மாகாணங்களுக்குமான நிதிப்பரவலாக்கத்தை செய்வதற்கும் அதனை சிறிலங்கா ஜனாதிபதியே தான் நியமிக்கும் ஆளுநர் மூலம் பாராளுமன்றத்தையும் கடந்து முன்னெடுப்பதற்குமான அதிகாரத்தை பாராளுமன்றம் சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரமுள்ள சிறிலங்கா ஜனாதிபதிக்கு வழங்குவதுமான அரசியலமைப்பு திருத்தமே தவிர அது ஈழத்தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கான எந்தவொரு மாற்றுத் தீர்வையும் முன்வைக்கவில்லை என்பது சிறிலங்காவின் அரசியலமைப்பால் தெளிவாக்கப்பட்டுள்ளது என்பதை இலக்கு ஒவ்வொரு ஈழத்தமிழருக்கும் எடுத்துரைக்க விரும்புகிறது.

ஒருவேளை இன்று தனது படைபல ஆக்கிரமிப்பின் மூலம் ஈழத்தமிழரின் தாயகத்தை ஆக்கிரமித்துச் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்றத்தின் பாராளுமன்றக் கொடுங்கோன்மை மூலம் ஈழத்தமிழரின் அரசியல் பணிவைச் சிறிலங்கா பெறுகையில் ஈழத்தமிழர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிப்பணத்தையும் அதே சிறிலங்காவே பெறுவதால் தப்பிப்பிழைக்கும் பொறிமுறையில் அந்த வரிப்பணத்தைச் சிறிலங்காவிடமிருந்து பெற்று ஈழத்தமிழரின் நாளாந்த வாழ்வியல் பிரச்சினைகளுக்கு ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் பயன்படுத்த விரும்பின் அதனைத் தெளிவாக விளங்கப்படுத்த வேண்டும். மக்களுடைய தேவைகளும் வளங்களின் இருப்பும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் விபரங்களும் கல்வித் தேவைகள் வேலையில்லாதோரின் விவரங்கள் என்பன தொகுத்து வகுக்கப்பட்டிருந்தால் தான் வரிப்பணத்தை இதற்குச் செலவிடுங்கள் என்ற கோரிக்கையை முன்வைக்கலாம்.

எந்தவொரு ஈழத்தமிழ் அரசியல்வாதியாலும் ஈழத்தமிழர்களின் பொருளாதாரக் கொள்கைகள் ஈழத்தமிழரின் வெளியுறவுக் கொள்கைகள், ஈழத்தமிழரின் “இசட்” தலைமுறையினர் குறித்த புரிதல்கள் எதுவும் சான்றாதாரங்களுடன் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. கடந்த காலத்தை நினைந்து புலம்புவதும் எதிர்காலத்தை நினைந்து ஏங்குவதுமான முறையிலேயே ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் செயற்பட்டு நிகழ்காலத்துக்கான பலத்தை உருவாக்க இயலாதுள்ளனர் என்பதே அரசியல் எதார்த்தம். இதற்கு ஈழத்தமிழர்களின் கருத்துருவாக்கிகளும் சமய இலக்கிய படைப்பாளர்களும் விதிவிலக்கல்ல. வரலாற்றை வரலாறாக நிகழ்வின் உண்மைத்தன்மையை உண்மைத்தன்மையாக வெளியிடாது சமூக ஊடகங்கள் உணர்ச்சியூட்டல் மற்றும் மகிழ்ச்சியூட்டல் வழி செய்திகளையும் ஆய்வுகளையும் முன்னெடுத்து தனிநபர் தாக்குதல் மேடையாக சமுக ஊடகங்களை வளர்க்கும் போக்கு உள்ளவரை ஈழத்தமிழரின் தேசிய ஒருமைப்பாடு என்பது நடைமுறைச் சாத்தியமற்றதாகவே தொடரும் என்பதை இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது. இதுவே பொதுநன்மையை (common goods) முன்னிலைப்படுத்தி வேறுபாடுகளுக்கு மத்தியில் தேச உருவாக்கம் (Nation Building Process) செய்ய இயலாத தேசஇனமாக ஈழத்தமிழினம் தடுமாறுகிறது. இதற்கு பலம் பொருந்திய வானலைகள் காணலைகள் உருவாகி இந்த சமுக ஊடகங்கள் ஏற்படுத்தும் இனத்துவச் சிதறலுக்கு எதிர்வினை செய்ய வேண்டிய தேவையுள்ளது.

தேசிய ஒருமைப்பாடு என்பது எல்லாரும் ஒற்றுமையாகும் நிலையல்ல. பொதுநன்மை ஒன்றில் மாறுபாடுகள் வேறுபாடுகள் மத்தியிலும் இணைவது. பிரித்தானியாவின் கடைசிப் பிரதமர் சேர். கியர் ஸ்டாமர் உக்ரேனின் பாதுகாப்பு ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பு என்ற பொதுநன்மையில் பிரித்தானியா உறுப்பினர் நிலையில் இருந்து விலகிய ஐரோப்பிய ஒன்றியத்துடன் மாறுபாடுகள் வேறுபாடுகளுக்கு மத்தியிலும் ‘விருப்பில் இணையும் கூட்டினை” சமகால உலக அரசியல் முறைமையாகவே நடைமுறைப்படுத்தினார். இந்நிலையில் ஈழத்தமிழர்களின் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் ஈழத்தமிழர்களின் இருப்பை நிலைப்படுத்தல் என்ற பொதுவிருப்பில் கட்சிகள் அமைப்புக்கள் சிவில் சமூகத்தினர் கூட்டிணைந்து செயற்பட இலக்கு அழைக்கிறது.

இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு தேசமாகவே 146000 ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்த சிறிலங்காவின் ஈழத்தமிழின அழிப்பை அனுமதித்த இந்தியாவுக்கு 17 ஆண்டுகளின் பின்னர் 2026 இல் அதற்கான பரிகாரத்தைச் செய்வதற்கான சந்தர்ப்பமாக அன்று முள்ளிவாய்க்கால் சிறிலங்கா இனஅழிப்பின் கண்கண்ட சாட்சியாக இருந்த இன்றைய இந்திய வெளிவிவகாரச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி அவர்களிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இன்றைய அரசாங்கம் அரசியலமைப்பு மாற்றத்தால் நடைமுறைப்படுத்த முயலும் 2005-2019 காலத் தயாரிப்பான ஏக்கிய ராஜ்ஜிய அரசியலமைப்பு வரைவை தடுத்து நிறுத்தி இலங்கையின் ஒற்றையாட்சி முறையை ஒழித்து தமிழ்த் தேசத்தை அங்கீகரித்து அதன் தனித்துவமான இறையாண்மையை அடிப்படையாகக் கொண்ட கூட்டாட்சி அரசியலமைப்பை உருவாக்க இந்தியா உரிய செயற்பாடுகளைச் செய்ய வேண்டுமெனக் கோரியுள்ளார். இந்தியா இதனைச் செய்வதற்குத் தமிழக மக்களதும் மற்றைய மாநிலங்களின் மக்களதும் உலக மக்களதும் அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பில் உலக ஈழத்தமிழினமும் உலகத் தமிழர்களும் உள்ளனர்.

**ஆசிரியர்**




விதுரன்

இலங்கையின் சமீபத்திய அரசியல் மாற்றங்கள் தென்னாசியப் பிராந்தியத்தில் புதிய இராஜதந்திர மூலோபாயக் கோலத்தை வரைந்துள்ள போதிலும், புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான இருதரப்பு உறவில் காணப்படும் இடைவெளி நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.



அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிப் பீடமேறிய காலத்திலிருந்து, இந்தியாவிற்கு வழங்கிய இராஜதந்திர மற்றும் பொருளாதார வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தொடர்ச்சியாகக் காலங்கடத்தும் போக்கைக் கையாண்டு வருவது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவின் அடித்தளத்தையே உலுக்கத் தொடங்கியுள்ளது.

குறிப்பாக, இரு நாடுகளினாலும் பரஸ்பரம் ஒப்புக் கொள்ளப்பட்ட பொருளாதார, உள்கட்டமைப்பு மற்றும் ஆற்றல் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் திட்டமிட்ட வகையில் கிடப்பில் போடப்பட்டுள்ளமை புதுடில்லியின் பொறுமையைச் சோதிப்பதாக அமைந்திருக்கிறது.

கடந்த வாரம் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஜனாதிபதி செயலகத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடன் நடத்திய அவசரச்சந்திப்பும், அதனைத் தொடர்ந்து நொடிப்பொழுதில் ஒழுங்கமைக்கப்பட்டு இடம்பெற்ற இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரியின் விஜயமும், வெறுமனே வழமையான இராஜதந்திரச் சந்திப்புகள் அல்ல. மாறாக, இலங்கை அரசின் மெத்தனப் போக்கிற்கு எதிராக இந்தியா வெளிப்படுத்திய மிகக்கடுமையான எச்சரிக்கையும் ஆதங்கமுமேயாகும்.



புதுடில்லியின் பிராந்தியப் பாதுகாப்புக் கரிசனைகளும், இலங்கை மண்ணில் அயல்நாடுகளின் அச்சுறுத்தல் பரவாமல் தடுப்பதற்கான உத்தரவாதங்களும் எப்போதுமே இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் முதன்மையான இடத்தை வகிக்கின்றன.

2024 டிசம்பரில் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில், இலங்கையின் நிலப்பரப்பு இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவோ அல்லது தீங்கு விளைவிக்கும் வகையிலோ பயன்படுத்தப்படாது என்ற வலுவான உத்தரவாதம் இலங்கைத் தலைமையினால் வழங்கப்பட்டிருந்தது.

இருப்பினும், அண்மைக் காலத்தில் சீன ஆய்வுக் கப்பல்களின் தொடர்ச்சியான நடமாட்டங்களும், பாகிஸ்தான் கடற்படையின் அதிநவீன 'பி.என்.எஸ்.எம் ஹங்கோர்' நீர்மூழ்கிக் கப்பல் கொழும்புத்துறைமுகத்தில் நங்கூரமிட்டு வங்காள விரிகுடாவில் தனது அதிகாரத்தை விரிவுபடுத்தப் போவதாக அறிவித்தமையும் டில்லியை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இதற்குப் பதிலடியாக இந்திய கடற்படை 'ஐ.என்.எஸ். ஐராவத்' கப்பலை கொழும்புக்கு அனுப்பி தனது பலத்தைக் காட்சிப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த இராஜதந்திரப் பின்னணியில் தான், இலங்கை மீண்டும் தனது வாக்குறுதியிலிருந்து விலகிவிடக் கூடாது என்பதை நினைவூட்ட விக்ரம் மிஸ்ரி கொழும்புக்கு வருகை தந்தார்.



ஆட்சி மாற்றத்திற்கு அப்பாற்பட்டு, இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பான வாக்குறுதிகள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதை அநுர அரசிற்கு உணர்த்துவது புது டெல்லியின் உடனடித் தேவையாக இருந்தது.

இருப்பினும், தற்போதைய பிரதான முரண்பாட்டின் மையப்புள்ளியாக உருவெடுத்துள்ளது அபிவிருத்தித் திட்டங்களில் இலங்கை அரசு காட்டி வரும் காலதாமதமும் அசமந்தப் போக்குமேயாகும். போர் முடிந்த பின்னரான கடந்த 17 ஆண்டுகளில் மாத்திரம் இந்தியா இலங்கைக்கு சுமார் 7.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்கியுள்ளது.

இதில் 850 மில்லியன் டொலர் திருப்பிச் செலுத்த வேண்டிய அவசியமில்லாத கொடையாகும். டித்வா புயல் பேரழிவின் போது கூட இந்தியா உடனடியாக ஓடிவந்து 450 மில்லியன் டொலர் நிவாரண பொதியை அறிவித்தது.

ஆனால், அநுர அரசாங்கம் இந்த உதவிகளைப் பயன்படுத்திக் கொள்வதில் காட்டி வரும் இழுபறி நிலைமை இந்தியாவின் ஆதங்கத்தை மேலும் அதிகரித்துள்ளது. 450மில்லியன் டொலர் நிவாரணப்பொதியில் உள்ள 350மில்லியன் டொலர் கடன் திட்டத்திற்கு அதிகவட்டி அறவிடப்படுவதாகக் கூறி, அதை தட்டிக்கழித்து நிராகரிக்க இலங்கை அதிகாரிகள் முயன்ற செய்தி கசிந்தமை புதுடில்லியை ஆத்திரமடையச் செய்தது. இதன் விளைவாகவே இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அவசரமாக ஜனாதிபதி செயலகத்திற்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய சூழல் உருவானது.

காலங்காலமாக இந்தியாவுடனான அபிவிருத்தி உடன்பாடுகளில் இலங்கை காட்டி வரும் இழுபறி முறைமை அநுர அரசின் கீழும் எந்தவித மாற்றமுமின்றித் தொடர்வது டில்லிக்கு பெரும் ஏமாற்றமளிப்பதாக உள்ளது.

திருகோணமலை சம்பூர் சூரிய சக்தி மின் திட்டம், காங்கேசன்துறை துறைமுக விரிவாக்கம், பலாலி விமான நிலைய மேம்பாடு, தரைப்பாலம், குழாய் வழி எண்ணெய் விநியோகம், மின்சார இணைப்புத் திட்டம் மற்றும் திருகோணமலை எரிபொருள் கேந்திரத் திட்டம் என்று இந்தியாவின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படவிருந்த பிரமாண்ட திட்டங்கள் அனைத்தும் நிர்வாகத் தடங்கல்கள் என்ற போர்வையில் கிடப்பில் போடப்பட்டுள்ளன.



இத்திட்டங்களை விரைவாக அமுல்படுத்துவதாக முன்னைய பேச்சுவார்த்தைகளின் போது உறுதியளிக்கப்பட்ட போதிலும், அநுர அரசாங்கம் தனது அதிகாரத்துவ அமைப்புகளின் பின்னணியில் மறைந்துகொண்டு இத்திட்டங்களைத் திட்டமிட்டே தாமதப்படுத்தி வருகிறது என்ற வலுவான குற்றச்சாட்டு டில்லி தரப்பில் முன்வைக்கப்படுகிறது.

இலங்கை அரசின் இந்தத் தட்டிக்கழிக்கும் போக்கை முறியடிக்கும் நோக்கில், இந்தியத் தரப்பு முன்வைத்த யோசனை அநுர அரசாங்கத்திற்கு மிகப் பெரிய இராஜதந்திரப் பொறியாக மாறியுள்ளது. இந்திய நிதியுதவியுடனான திட்டங்களை கண்காணித்து அமுல்படுத்துவதற்காக ஜனாதிபதி செயலகத்திலேயே தனியானவொரு விசேட கண்காணிப்புப் பிரிவை நிறுவுமாறு இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இதுவரை காலமும் தமக்குக் கீழ் இயங்கும் அமைச்சுகளையும் அதிகாரிகளையும் காரணம் காட்டி தப்பித்து வந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு, இந்த யோசனை பெரும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது.



ஜனாதிபதி செயலகத்தில் தனிப்பிரிவு அமைக்கப்பட்டால், திட்டத் தாமதங்களுக்கு ஜனாதிபதியும் அவரது நேரடியாக நியமிக்கப்பட்ட அதிகாரிகளுமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டிவரும். இதனாலேயே, இந்த யோசனைக்கு உடனடியாக இணக்கம் தெரிவிக்க முடியாமல் அநுர அரசு தடுமாற ஆரம்பித்துள்ளது.

இதேநேரம், தமிழர்களின் அரசியல் உரிமைகள் மற்றும் மாகாண சபைத்தேர்தல்கள் விவகாரத்திலும் அநுர அரசின் இரட்டை நிலைப்பாட்டை விக்ரம் மிஸ்ரியின்

தொடர்ச்சி: பக்கம் 19




கடந்த ஜூலை 31ம் திகதி வெபினார் (webinar) நிகழ்ச்சி ஒன்று ஒலிபரப்பப்பட்டது, இதில் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தினால் “ செம்மணி மனித புதை குழி” நாங்கள் இன்னும் தேடிக்கொண்டு இருக்கிறோம்” எனும் தலைப்பில் சிறப்பு கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

இதில்,

**ஜொஹான் ஸௌஃபி–** ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை மனித உரிமை மீறல் விடயத்தில் சான்றுகள் சேகரிக்கும் அலுவலகத்தின் தலைவர்.

**இன்கிரிட் மஸாஜ்** – சிறிலங்கா கம்பெயின் நிறுவனத்தின் தலைவி.
**கே.எஸ். இரத்தினவேல்** சிரேஷ்ட சட்டத்தரணி, செம்மணி புதைகுழி சம்பந்தமாக ஆய்வுசெய்யும் நிறுவனமான CHRD இன் இயக்குனர்.

Webinar Moderator:
**யாஸ்மின் சுக்கா–** ITJP International Truth & Justice Project இன் தலைவி. (சிறிலங்காவின் யுத்தக் குற்றங்களை ஆய்வுசெய்து அறிக்கை வெளியிட்ட தருஸ்மன் நிபுணர் குழுவின் உறுப்பினராக செயல்பட்டவர்) ஆகிய மூன்று நிபுணர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கலந்துரையாடல் குறித்து இலக்கு செய்தி ஊடகத்திற்கு கே.எஸ். இரத்தினவேல் (மூத்த சட்டத்தரணி) அவர்கள் வழங்கிய கருத்து....

**கேள்வி:**
**செம்மணி புதைகுழி ஏன் இவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறது?**

**பதில்:**
இலங்கையில் இதுவரை சுமார் 15 மனிதப் புதைகுழிகள் கண்டறியப்பட்டுள்ளன. ஆனால் அவற்றில் செம்மணி புதைகுழி மிகவும் முக்கியமானதாகக் கருதப் படுகிறது. காரணம், இந்தப் பகுதி முழுமையாக இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதைச் சுற்றி இராணுவ முகாம்களும் பாதுகாப்பு அரண்களும் அமைந்திருந்தன. எனவே, அக்காலத்தில் வேறு ஆயுதக் குழுக்கள் அல்லது தனிநபர்கள் இந்தப் புதைகுழியுடன் தொடர்புடையிருக்க வாய்ப்பு மிகவும் குறைவு.

**கேள்வி:**
**தற்போது நடைபெறும் அகழாய்வில் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்ன?**

**பதில்:**
அகழாய்வு என்பது எலும்புக்கூடுகளை மீட் பதற்காக மட்டும் நடத்தப்படக் கூடாது. அதனுடன் இணைந்து முழுமையான குற்றவியல் விசாரணையும் முன் னெடுக்கப்பட வேண்டும். மரபணு (DNA) பரிசோதனைகள் மூலம் உயிரிழந்தவர்கள் யார், அவர்கள் எந்தக் கால கட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கண்டறிய முடியும். அதோடு சாட்சியங்கள், ஆவணங்கள் மற்றும் பிற தடயங் களும் சேகரிக்கப்பட்டு, சர்வதேச தரத்திற்கேற்ப புலனாய்வு முன்னெடுக்கப்பட வேண்டும். இந்தக் கருத்தே அண்மையில் நடைபெற்ற ITJP கலந்துரையாடலிலும் வலியுறுத்தப்பட்டது.

**கேள்வி:**
**அகழாய்வில் இதுவரை வெளியாகி யுள்ள தகவல்கள் என்ன கூறுகின்றன?**

**பதில்:**
மீட்கப்பட்டுள்ள எலும்புக்கூடுகளில் வயது வந்த வர்கள் மட்டுமல்ல; முதியவர்கள், இளைஞர்கள், சிறுவர்கள், கைக்குழந்தைகள் என பல தரப்பினரும் இருப்பதாகத் தெரிய வருகிறது. சில குழந்தைகளின் அருகில் பால் போத்தல்கள், பாடசாலைப் பைகள், காலணிகள் போன்ற பொருட்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மிகவும் அதிர்ச்சியூட்டும் சான்றுகளாகும்.

**கேள்வி:**
**இந்த இடம் ஒரு இந்து மயானம் என்பதும் முக்கியமான அம்சமாகக் கூறப்படுகிறது. ஏன்?**

**பதில்:**
இந்து மரபில் பொதுவாக உடல்கள் தகனம் செய் யப்படுகின்றன. எனவே ஒரு இந்து மயானத்தில் இவ்வளவு அதிகமான மனித உடல்கள் புதைக்கப்பட்டிருப்பது வழக் கத்திற்கு மாறானது. மேலும், உடல்கள் ஒன்றின் மேல் ஒன்று அடுக்கப்பட்டும், ஆடையின்றியும், சில இடங்களில் பெரியவர்களின் அருகில் அல்லது மடியில் குழந்தைகளின் எலும்புக்கூடுகளும் காணப்படுகின்றன. இத்தகைய அம்சங்கள் அனைத்தும் இயல்பான அடக்க நிகழ்வுகளுடன் பொருந்தாதவை.

**கேள்வி:**
**இந்த விசாரணையின் அடுத்த கட்டம் என்னவாக இருக்க வேண்டும்?**

**பதில்:**
அகழாய்வில் மீட்கப்படும் மனித எச்சங்கள் அனைத்தும் அறிவியல் ரீதியாக பாதுகாக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடம் மற்றும் தொடர்புடைய ஆய்வகங்களில் மரபணு மற்றும் நீதித்துறை மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதேநேரம், 1995 முதல் 2000 வரையிலான காலப்பகுதியைச் சேர்ந்ததாகக் கருதப்படும் காலணிகள், நாணயங்கள் உள்ளிட்ட சான்றுப் பொருட்களும் குற்றவியல் விசாரணை யின் ஒரு பகுதியாக ஆராயப்பட வேண்டும்.

**கேள்வி:**
**பொறுப்புக்கூறல் தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

**பதில்:**
குற்றச்செயலில் நேரடியாக ஈடுபட்டவர்களை மட்டும் விசாரிப்பது போதுமானதல்ல. சர்வதேச சட்டத்தில் உள்ள ‘கட்டளைப் பொறுப்புக்கூறல்’ (Command Responsibility) என்ற கொள்கையின்படி, கட்டளையிட்ட உயர் அதிகாரிகளும் பொறுப்பேற்க வேண்டும். இலங்கையில் இதுவரை அந்த நடைமுறை உரிய வகையில் அமுல்படுத் தப்படவில்லை என்பதே கவலைக்குரிய விடயமாகும்.

**கேள்வி:**
**கிருஷாந்தி குமாரசுவாமி வழக்கை நீங்கள் ஏன் குறிப்பிடுகிறீர்கள்?**

**பதில்:**
அந்த வழக்கில் தண்டனை பெற்ற முன்னாள் இராணுவ வீரர் சோமரத்ன ராஜபக்ஷ, “நாங்கள் மேலதிகாரிகளின் கட்டளையின் பேரில்தான் செயல் பட்டோம்; எங்களைத் தண்டித்தவர்கள் அந்தக் கட்டளை யிட்ட அதிகாரிகளை ஏன் தண்டிக்கவில்லை?” என்று நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தார். அந்தக் கேள்வி இன்றும் பதிலின்றி உள்ளது.

**கேள்வி:**
**இறுதியாக, இந்த விசாரணை எந்த நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கருதுகிறீர்கள்?**

**பதில்:**
செம்மணி புதைகுழி தொடர்பான விசாரணை என்பது வெறும் அகழாய்வாக இருக்கக் கூடாது. உண்மையை வெளிக்கொணரும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி வழங்கும், மேலும் பொறுப்புக்கூற வேண்டியவர்களை சட்டத்தின் முன் நிறுத்தும் ஒரு சுயாதீனமான மற்றும் சர்வதேச தரத்திலான குற்றவியல் விசாரணையாக இது முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவே நீதிக்கும், பொறுப்புக்கூறலுக்கும், மீண்டும் இத்தகைய சம்பவங்கள் நிகழாதிருப்பதற்குமான அடிப்படையாக அமையும்.

• • •

# ‘நீதியின் ஓலம் 2’
# ‘VOICE OF JUSTICE 2’




**ஆவணி 14,15,16, 17 வரையிலான 04 நாட்கள்**
**இனவழிப்புக்கான சர்வதேச நீதியை வலியுறுத்தி**
**ஜநாவை நோக்கிய பேரணி...**

**–தாயகச் செயலணி–**




பா.அரியநேத்திரன்

கடந்த 2003 ,அக்டோபர்,12 ஞாயிற்றுக்கிழமை திராய்க்கேணி பெரியதம்பிரான் கோயில் பகுதியை சூழவுள்ள நிலத்தில் ஊர்மக்கள் சிரமதானப்பணியில் ஈடுபட்டிருந்தவேளையில் அங்குள்ள குழி ஒன்றில் மனித எச்சங்கள் பலவற்றக் கண்டுபிடித்தனர். இந்த எச்சங்கள் கடந்த 1990,ஆகஸ்ட் ,06, திங்கட்கிழமை அம்பாறை மாவட்டம் திராய்க்கேணி கிராமத்தில் கொல்லப்பட்ட தமிழர்களுடையதாக இருக்கலாம் என உள்ளூர் மக்கள் அப்போது தெரிவித்தனர்.



2002,பெப்ரவரி, 22,ல், இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நோர்வே நாட்டின் அனுசரணையுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானது. இது இரு தரப்பினருக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்து அது தொடர்ந்த காலத்தில்தான் 2003, அக்டோபர்,12, ல் திராய்க்கேணியில் மனித எச்சங்கள் பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டன. அப்போது இதனை எவரும் பெரிதாகப் பார்க்கவில்லை. அதனால் இது தொடர்பான விசாரணைகள் எதுவும் இடம் பெறவில்லை.அப்படியே அந்த விவகாரம் மூடி மறைக்கப்பட்டன.

ஆனால் அந்த மனித எச்சங்கள் அம்பாறை மாவட்டம் திராய்க்கேணி எனும் பூர்வீக தமிழ் கிராமத்தில் 1990,ஆகஸ்ட் ,06, ம் திகதி இலங்கை இராணுவத்தினருடன் இணைந்து முஸ்லிம் ஊர்காவல் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையில் கொல்லப்பட்ட 50, தமிழர்களின் உடலங்களாக இருக்கலாம் என அப்பகுதி பொதுமக்கள் 2003, அக்டோபர் காலப்பகுதியில் சந்தேகம் வெளியிட்டிருந்தனர்.

இன்று 2026,ஆகஸ்ட்,06, திராய்க்கேணி படுகொலை இடம்பெற்ற 36வது ஆண்டு நினைவு நாளாகும். வழமை போன்று இந்தப்படுகொலைக்கும் எந்த நீதியும் இதுவரை கிடைக்கவில்லை. அந்தப் படுகொலையில் உயிர் நீத்த உறவுகளில் 50, பெயர் விபரங்கள் இது.


1. இளையதம்பி மயிலாப்போடி
2. இராமக்குட்டி மயில்வாகனம் (வயது 18 – தொழிலாளி)
3. இராசதுரை பிரகலா
4. நாகலிங்கம் தம்பிராசா
5. நல்லதம்பி புலேந்திரன் (வயது 27 – தொழிலாளி)
6. கனகரத்தினம் அழகையா (வயது 35 – ஊழியர்)
7. கனகரட்ணம் சுப்ரமணியம்
8. கந்தக்குட்டி பூபாலப்பிள்ளை (வயது 19 – தொழிலாளி)
9. கந்தக்குட்டி வேலாயுதம்
10. கா.பாஸ்கரலிங்கம் (வயது 39 – தொழிலாளி)
11. கா.சாமித்தம்பி (வயது 43 – விவசாயம்)
12. காந்தன் நவரட்ணம்
13. காளிக்குட்டி பாக்கியராசா
14. காளிக்குட்டி தம்பிப்பிள்ளை
15. கதிரன் கணபதி
16. கதிரன் பாக்கியராசா (வயது 34 – தொழிலாளி)
17. கணபதி காளிக்குட்டி (வயது 50 – ஊழியர்)
18. கணபதி காளிமுத்து (வயது 45 – வைத்தியர்)
19. கணபதிப்பிள்ளை கிருஷ்ணன்
20. கணபதிப்பிள்ளை அமிர்தலிங்கம்
21. பூபாலப்பிள்ளை புலேந்திரன் (வயது 30 – தொழிலாளி)
22. பூபாலப்பிள்ளை ஏகாம்பரம் (வயது 24 – தொழிலாளி)
23. தம்பியப்பா கோபால் (வயது 50 – தொழிலாளி)
24. தம்பிமுத்து ஆனந்தராசா
25. மு.கணபதி (வயது 76 – தொழிலாளி)
26. மா.குஞ்சித்தம்பி (வயது 50 – தொழிலாளி)
27. மா.ஜெயசீலன் (வயது 24 – தொழிலாளி)
28. மார்க்கண்டு கிருபை (வயது 30 – தொழிலாளி)
29. மார்க்கண்டு மயில்வாகனம்
30. மார்க்கண்டு ஜெயக்குமார்
31. முருகன் இளையதம்பி (வயது 39 – தொழிலாளி)
32. முருகேசு நாகேந்திரன் (வயது 28 – தொழிலாளி)
33. பொன்னன் அழகையா (வயது 29 – தொழிலாளி)
34. செல்லையா பாக்கியராசா (வயது 26 – தொழிலாளி)
35. செல்வம் சீனித்தம்பி
36. செல்லத்துரை கிருஸ்டியன்
37. செல்லத்துரை பாலச்சந்திரன்
38. செல்லத்துரை அமிர்தலிங்கம்
39. வேலன் கதிரேசப்பிள்ளை (வயது 44 – தொழிலாளி)
40. வேலுப்பிள்ளை குணராசா
41. வேலுப்பிள்ளை பாஸ்கரலிங்கம் (வயது 35 – தொழிலாளி)
42. சாமித்தம்பி நாகராசா
43. சாமித்தம்பி சௌந்தராஜன்
44. சின்னத்தம்பி கன்னி
45. சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை
46. சின்னத்தம்பி சிவசிதம்பரம்
47. சற்குணம் இளையதம்பி
48. சற்குணம் விஜயலட்சுமி
49. வ.பாக்கியராசா (வயது 26 – தொழிலாளி)
51. விஸ்வலிங்கம் அழகையா.

இவர்கள் 50, பேர்களை விட இன்னும் சிலர் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் அவர்களுடைய பெயர்கள் கிடைக்கவில்லை எனவும் கூறப்படுகிறது. இந்த பெயர்களை உடையவர்களின் உடலமே 2013, அக்டோபர்,12, ல் திராய்க்கேணி படுகொலையாக இருக்கலாம் என்பதே அப்பகுதி மக்கள் அன்று கூறிய உண்மை.

1990, ஆகஸ்ட்,06,ல், எப்படி அந்த தமிழினப்படுகொலைகள் நடந்தன என்பதைப் பார்ப்போம் 1990, ஆகஸ்ட்.05 இல் திராய்க்கேணி பகுதியில் வசித்து வந்த முஸ்லிம்களில் ஒருவர் காட்டுக்குச் சென்றவேளை மர்மமான முறையில் உயிரிழந்த்தைத் தொடர்ந்து அன்று அப்பகுதியில் சுற்றிவளைப்பின்போது திராய்க்கேணி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு பொதுமக்கள் இடம் பெயர்ந்தனர்.

மறுநாள் 1990,ஆகஷ்ட், 06, ல் ஆலயத்தில் தஞ்சமடைந்த 50,க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் பால் வயது வித்தியாசமின்றி கத்தி, வாள், பொல்லு போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி வெட்டியும் கொத்தியும் படுகொலை செய்யப்பட்டார்கள். வீடுகளையும் அவர்களின் உடைமைகளையும் தீயிட்டு எரித்தார்கள்.

முஸ்லிம் ஊர்காவல் படையினர் இராணுவத்தினரின் உதவியுடன் 50, தமிழர்களைப் படுகொலை செய்தனர். வீடுகளினுள் வைத்து முதியவர்கள் பலர் உயிருடன் தீவைத்துக் கொளுத்தப்பட்டனர். 350 வீடுகள் குண்டர்களால் தீக்கிரையாக்கப்பட்டன. சரோஜா என்ற 13 வயதுச் சிறுமி ஒருத்தி கடத்தப்பட்டு பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டாள். அன்று காலை 07,மணிக்கு ஆரம்பமான இப்படுகொலை நிகழ்வுகள் பி.ப.01,மணி வரை நீடித்திருந்தது. இப்படுகொலைகளை அடுத்து அக்கிராமத்தில் இருந்து வெளியேறிய மக்கள் காரைதீவு அகதி முகாம்களில் தங்கியிருந்தனர். 04,ஆண்டுகளுக்குப் பின்னர் 1995,ல், மீண்டும் திராய்கேணிக்கு தமது சொந்த ஊர் திரும்பினர்.



திராய்க்கேணி இனப்படுகொலைகள் குறித்து முழுமையான விசாரணைகள் வேண்டும் எனக் குரல் கொடுத்த திராய்க்கேணி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஈ.மயிலைப்போடி என்பவர் 1997 ஆம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்டார்.

திராய்கேணி கிராமம் 1954ஆம் ஆண்டு அமரர் தர்மரட்ணம் என்பவரின் தென்னந்தோட்டத்தில் அமைக்கப்பட்ட குடியேற்றக் கிராமமாகும். திராய்க்கேணிக்கு கிழக்குப் பக்கத்தில் ஒலுவில் கிராமமும் தெற்குப் பக்கத்தில் பாலமுனையும் அமைந்துள்ளது. இக்கிராமம் அட்டாளைச்சேனை உதவிஅரசாங்க அதிபர் பிரிவின் கீழும் அக்கரைப்பற்று நீதிமன்று நியாதிக்கத்தின் கீழும் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் முந்நூற்றெழுபதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் முந்நூற்றைம்பது வீடுகளில் வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் பிரதான தொழில் நெற்செய்கை விவசாயமாகும்.

தொடர்ச்சி: பக்கம் 18




கிருசாந்தி குமாரசாமி படுகொலை செய்யப்பட்ட நாள், ஒரு பள்ளி மாணவியின் கொடூரமான முடிவை மட்டும் நினைவுபடுத்தும் நாள் மாத்திரமின்றி, அந்நாளே, பின்னாளில் உலகின் கவனத்தை ஈர்த்த செம்மணி இனப்படுகொலையின் கதவைத் திறந்த நாளுமாகும். இன்றைய காலத்தில் செம்மணி மீண்டும் உலகை நோக்கிப் பேசுகிறது. மண்ணுக்குள் புதைக்கப்பட்ட மனிதர்கள் எலும்புக்கூடுகளாக எழுந்து, இன்னும் மறுக்கப்பட்ட நீதியை கோரிப் போராடுகின்றனர். அண்மைய அகழாய்வுகளில் 480இற்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருப்பது, செம்மணி ஒரு சாதாரண புதைகுழி அல்ல; ஒரு திட்டமிட்ட இன அழிப்பின் வரலாற்றுச் சாட்சியம் என்பதையே மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இந்நிலையில் கிருசாந்தி குமாரசாமி படுகொலை என்பது செம்மணியின் குறியீடு ஆகும்.




## வீடு திரும்பாத மகள்

1996 ஆகஸ்ட் 7 அன்று, யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியான கிருசாந்தி குமாரசாமி, இறுதி நிகழ்வொன்றில் பங்கேற்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, இராணுவச் சோதனைச் சாவடியில் தடுத்து நிறுத்தப்பட்டார். சிறுவயதிலேயே தந்தையை இழந்த அவர், ஆசிரியையான தாயின் அரவணைப்பில் வளர்ந்த திறமையான மாணவி. மகள் வீடு திரும்பாததால், அவரது தாய் இராசம்மா, தம்பி பிரணவன் மற்றும் அயலவர் சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகியோர் இராணுவ முகாமுக்குச் சென்றனர். ஆனால் அவர்கள் நால்வரும் உயிருடன் திரும்பவில்லை.



கிருசாந்தி மீது பல இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து பாலியல் வன்முறையை மேற்கொண்ட பின்னர் அவர் கொலை செய்யப்பட்டார். அவருடன் அவரது தாய், தம்பி மற்றும் அயலவரும் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர். இந்தக் கொலை, யாழ்ப்பாணத்திலும் சர்வதேச மட்டத்திலும் பெரும் அதிர்வை ஏற்படுத்தியது. நீதிமன்ற விசாரணை தொடங்கியபோது, அது ஒரு குடும்பத்தின் கொலை வழக்காக மட்டுமே தோன்றியது. ஆனால் பின்னர் அது செம்மணி என்ற மாபெரும் மனிதப் புதைகுழியின் இரகசியத்தை உலகிற்கு வெளிப்படுத்தியது.



## கொலையாளியின் வாக்குமூலம்

1998 ஜூலை 3 அன்று, கிருசாந்தி வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய் சோமரத்தின ராஜபக்ச அளித்த வாக்குமூலம் இலங்கையையே உலுக்கியது. கிருசாந்தியும் அவரது குடும்பத்தினரும் மட்டுமல்ல; 300 முதல் 400 வரையான தமிழர்கள் செம்மணியில் புதைக்கப்பட்டுள்ளனர் என்றும், மேலதிகாரிகளின் கட்டளையின் பேரில் தாம் சடலங்களை புதைத்ததாகவும், புதைகுழிகளை அடையாளம் காட்டத் தயாராக இருப்பதாகவும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். அதனுடன் தொடர்புடைய பல இராணுவ அதிகாரிகளின் பெயர்களையும் அவர் வெளியிட்டார்.



அப்போதைய அரசு கிருசாந்தி வழக்குடன் இந்த விவகாரத்தை முடிமறைக்க முற்பட்டது. ஆனால் உலகளவில் இந்த விவகாரம் அவதானிக்கப்பட்டது. செம்மணிப் புதைகுழியை தோண்ட வேண்டும் உண்மையை கண்டறிய வேண்டும் என்று பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் குரல் கொடுத்தன. இதனையடுத்து இலங்கை அரசுக்கு புதைகுழி விவகாரத்தை தட்டிக்கழிக்க முடியாத நிலை ஏற்பட்டது. செம்மணியில் வெளிவந்த எலும்புக்கூடுகள் சோமரத்தின ராஜபக்ச வாக்குமூலத்தை மெய்ப்பித்தது.

## சிக்கிய இராணுவ அதிகாரிகள்

## தீபச்செல்வன்

அன்றைய காலத்தில் செம்மணியில் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளை கண்ணீருடன் திரண்ட தாய்மாரும் உறவுகளும் அடையாளம் காட்டினர். யாழ்ப்பாணமே கண்ணீர் கோலம் பூண்டது. செம்மணியைவிட 16 புதைகுழிகள் உள்ளன என்றும் அதில் பத்துப் புதைகுழிகளை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் ஐந்தை உதவி பொலீஸ் அதிகாரி பெரேராவால் காட்ட முடியும். எஞ்சிய ஒன்றை – அது ஒரு கோவில் அருகில் உள்ளது – டி.எம். ஜெயதிலக்காவால் (மரணதண்டனை பெற்ற இன்னொரு சிப்பாய்) அடையாளம் காட்ட முடியும் என்றும் ராஜபக்ச கூறினார்.



அத்துடன் இந்தப் படுகொலைகளுடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிகளின் பட்டியலையும் தரமுடியும் என்று சிப்பாய் ராஜபக்ச கூறினார். கப்டன் லலித் ஹேவா, லெப்டினன் விஜயசிறிவர்த்தன, லெப்டினன் துடுகல, மேஜர் வீரக்கொடி, மேஜர் குணசேகரா முதலிய இராணு அதிகாரிகளது விபரங்களை பகிரங்கப்படுத்தினான். அத்துடன் தனது வாக்குமூலத்தில் பல்வேறு கொலைகளை ராஜபக்ச விபரித்திருந்தார். இதன்போது செல்வரத்தினம் என்ற அரச ஊழியரை இராணுவம் கைது செய்த பின்னர் அவரை தேடி வந்த மனைவிக்கு என்ன நடந்தது என்று கீழ்கண்டவாறு ராஜபக்ச விபரித்தார்.

## போர்க்குற்ற வாக்குமூலம்

‘ஒருநாள் ஒரு மண்வெட்டியை எடுத்துவருமாறு கப்டன் லலித் ஹேவா என்னிடம் கேட்டார். நான் அங்கு சென்றபோது ஆடையில்லாது நிர்வாண கோலத்தில் இருந்த பெண் ஒருவருடன் கப்டன் ஹேவா நின்றார். அந்தப் பெண்ணும் அவரது கணவரும் அந்த முகாமுக்கு முன்பு கொண்டு வரப்பட்டிருந்தனர். கப்டன் ஹேவா அந்தப் பெண்ணை கற்பழித்தார். பின்னர் நான் கொண்டுவந்து கொடுத்த மண் வெட்டியினாலும் இன்னும் சில பொல்லுகளாலும் கப்டன் ஹேவா அந்தக் கணவர் மனைவி இருவரையும் தாக்கினார். இருவரும் இறந்து போனார்கள்.’

இந்த வாக்குமூலம் அரசால் எளிதில் புறக்கணிக்க முடியாத ஒன்றாக மாறியது. சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் அழுத்தத்தால் செம்மணியில் அகழாய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. அங்கு வெளிவந்த மனித எலும்புக்கூடுகள், நீதிமன்றத்தில் கூறப்பட்ட வாக்குமூலத்தை வெறும் குற்றச்சாட்டாக அல்ல, நிலத்திற்குள் புதைக்கப்பட்ட உண்மையாக மாற்றின. எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டபோது, காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள்

தொடர்ச்சி: பக்கம் 19




கரிகாலன்

இலங்கை அரசியல் களத்தில் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள், நிலங்கள் மற்றும் அரசியல் தீர்வு என்பன பல தசாப்தங்களாகத் தீர்க்கப்படாத வினாக்களாகவே நீடித்து வருகின்றன. ஆட்சி மாறினாலும், ஆட்சியில் அமரும் தலைவர்களின் அணுகுமுறைகள் மாறினாலும், தமிழ் பேசும் கட்சிகளின் தலைமைகள் கையாளும் இராஜதந்திர உத்திகளும் அரசியல் நாடகங்களும் ஒரே பாணியிலேயே அரங்கேறி வருகின்றன.



அண்மையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய 6 தமிழ் பேசும் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன.

தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் கோரிக்கைகளை ஒன்றிணைந்த குரலில் முன்னிறுத்துவதாகக் கூறப்படும் இந்த 6 கட்சிகளின் கூட்டில், உள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசனோ அல்லது அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீனோ குறித்த சந்திப்புக்களில் பங்கேற்கவில்லை.



பிரதான தலைவர்கள் பின்னணியில் ஒதுங்கிக் கொள்ள, பிரதிநிதிகளை மட்டும் அனுப்பி நடத்தப்படும் இந்த அரைமனதுடனான கூட்டணிகள், தமிழ் பேசும் மக்களின் உண்மையான அபிவிருத்திக்கான கொள்கை சார்ந்த ஒன்றிணைவா அல்லது அரசியல் இருப்பைத் தக்கவைப்பதற்கான வெறும் தற்காலிக நாடகப் பங்களிப்பா என்ற கேள்வியை வலுவாக எழுப்பியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடனான சந்திப்பின் போது, புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பணிகள் தாமதமாகிவிட்டதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்ட போதிலும், அதை நிறைவேற்றுவதற்கான தெளிவான காலவரையறையையோ அல்லது வழிவரைபடத்தையோ வழங்கிவிடவில்லை. நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும் என்ற பழைய பல்லவியையே அவர் மீண்டும் பாடியுள்ளார். அதேவேளையில், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுடனான சந்திப்பில், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் மிக முக்கிய கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன. 2016-2018 ஆம் ஆண்டுகளில் நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு வழிமுறைகள் மற்றும் அதன் இடைக்கால அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே புதிய அரசியலமைப்புச் செயல்முறைகள் தொடரப்பட வேண்டும் என்ற மறைமுக அழுத்தம் இந்தியத் தரப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு இலக்கை அடைவதற்கான பாதையில் அரைவாசி தூரத்தைக் கடந்த பின்னர், அதைத் தூக்கி எறிந்து விட்டு பூச்சியத்திலிருந்து மீண்டும் தொடங்குவது புத்திசாலித்தனமானது அல்ல என்று இந்திய உயர்ஸ்தானிகர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது இதுவொரு புத்திசாலித்தனமான இராஜதந்திர யோசனையாகத் தோன்றினாலும், இதன் பின்னணியில் உள்ள அரசியல் ஆபத்துக்கள் மிக ஆழமானவை.



இதில் முதலாவது, சுமந்திரன் தானாக ஏற்கனவே தயார் நிலையில் உள்ள இடைக்கால அறிக்கை விடயத்தினைக் கூறுவதை விடவும், ஏனைய தலைவர்களையும் ஒருங்கிணைத்து ஒரு தளத்தில் அமர்த்திவிட்டு 'குருநாதரான இந்தியாவை' வைத்து கூற வைப்பது இலகுவானது என்பதை உணர்ந்து தான் அவர் அதற்கான காய்நகர்த்தலைச் செய்திருக்கின்றார். அதனடிப்படையில் தான் ஆறு கட்சிகளின் கூட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

பின்னர். 2016-2018 காலகட்டத்தில் எம்.ஏ.சுமந்திரனின் கணிசமான பங்களிப்பில் உருவாக்கப்பட்ட புதிய அரசியலமைப்புக்கான செயற்பாட்டின் வழியில் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையில், நாட்டின் தன்மை 'ஏக்கிய ராஜ்ய' 'ஒருமித்த நாடு' என்ற சிங்கள, தமிழ் மொழிகளுக்கிடையிலான வார்த்தை மாயாஜாலம் காணப்படுகின்றது. அதற்கான புதிய அர்த்தக்கற்பிதங்களை மீண்டும் மேலெழுப்பி தமிழ் மக்களின் இறைமையை முடக்கிப்போடும் ஒரு முயற்சியே இதுவாகும்.

ஒற்றையாட்சி முறைமையின் கொடூரமான பிடிக்குள் தமிழ் பேசும் மக்களை மீண்டும் அடகுவைத்து, பெயரளவில் மட்டும் சில அதிகாரப் பகிர்வுகளைக் காட்டும் இந்த இடைக்கால அறிக்கை முறைமை, தமிழ் மக்களின் சுயாட்சி உரிமையை முற்றாக நிராகரிக்கிறது.

இந்தியத் தரப்பும், தமிழ் அரசுக் கட்சியின் மிதவாதக் குழுவினரும் மீண்டும் இந்த இடைக்கால அறிக்கையை நோக்கியே நகர்வுகளைத் திருப்புவது, வரவிருக்கும் செப்டெம்பர் மாத ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 63ஆவது கூட்டத்தொடரில் அநுர அரசாங்கத்திற்குப் சர்வதேச சமூகத்தின் முன் மீண்டுமொரு 'பிணையெடுப்பை' வழங்குவதற்கான மூலோபாய நகர்வாகும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

'அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படுகின்றன' என்ற மாயையை உருவாக்கி, இலங்கையைச் சர்வதேசப் பொறுப்புக்கூறலில் இருந்து காப்பாற்றுவதற்கே இந்த 'ஒருமித்த நாடு' சூத்திரம் மீண்டும் கையில் எடுக்கப்படுகிறது என்பதை முதலில் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.



இத்தகைய சூழலில் தான், 6 தமிழ் பேசும் கட்சிகளின் போலி ஒருமைப்பாட்டு நாடகத்திற்கு நேர்மாறாக, உண்மையான தமிழ் தேசிய அரசியலின் நிலைப்பாடு என்ன என்பது அம்பலமாகியுள்ளது. இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரியுடனான சந்திப்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைத்த பகிரங்கமான கோரிக்கை, தமிழ் மக்களின் உண்மையான அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது.

இலங்கை அரசின் மீது இந்திய அரசு தனது இராஜதந்திர அழுத்தத்தைச் செலுத்தி, 'ஏக்கிய ராஜ்ய' என்ற ஒற்றையாட்சிச் சட்டத்தைக் திணிப்பதைத் தடுக்க வேண்டும் என்றும், இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறையை முற்றிலும் ஒழித்து, தமிழ் தேசத்தை அங்கீகரிக்கும் தனித்துவமான இறைமையின் அடிப்படையிலான கூட்டாட்சி அரசியலமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மிகத் தெளிவாக வலியுறுத்தினார்.

அத்துடன், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுச் தாயகப் பகுதிகளில், சுயாட்சி மற்றும் தன்னாட்சியின் மூலம் தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை நடைமுறைப்படுத்தக்கூடிய அரசியலமைப்பு ஒழுங்கே உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இக்கட்டான இந்த அரசியல் தருணத்தில், தமிழ் தலைமைகள் சுயபரிசோதனை செய்ய வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. தமிழ் பேசும் கட்சிகள் என்ற பெயரில் முஸ்லிம் மற்றும் மலையகக் கட்சிகளுடன் இணைந்து குரல் கொடுப்பதற்கு முதலாக, தமிழ் தேசியக் கட்சிகள் கொள்கை ரீதியாக ஒன்றுபட வேண்டும்.

வெறும் 'தமிழ் பேசும் கட்சிகள' என்ற அடையாளத்திற்குள் ஒளிந்துகொண்டு, 'ஏக்கிய ராஜ்ய' என்ற ஒற்றையாட்சி அமைப்பிற்குள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைக் கரைத்துவிட முனையும் தமிழரசுக் கட்சியின் வஞ்சக அரசியலுக்கு ஏனைய அமைப்புகள் பலியாகிவிடக் கூடாது. தமிழ் பேசும் மக்களின் நலன்களைப் பாதுகாப்பது என்பது, வெறும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதோடு அல்லது சில ஏக்கர் காணிகளை விடுவிப்பதோடு முடிந்து

தொடர்ச்சி: பக்கம் 18

# கிழக்கில் தமிழர்களுக்கு நேர்ந்த அநீதிகள்!




சிங்கள தேசத்தில் தமிழர்களுக்கு நடந்த அநீதிகள் மற்றும் படுகொலைகள் பல்வேறு தளங்களில் பேசப்படுவதுடன் அதற்கான நீதிகோரிய போராட்டங்களும் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகின்றன.

இந்த நாட்டின் ஆதிக்குடிகளாக இருந்த இனம் இன்று இரண்டாம் நிலை இனமாக மாற்றப்பட்டு இந்த நாட்டின் உரிமையாளர்களாக இருந்தவர்கள் இன்று இந்த நாட்டில் எங்களுக்கு உரிமைவேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டு போராடிவரும் நிலையில் இந்த நாட்டில் அந்த இனம் எதிர்கொண்ட அடக்குமுறைகளும் இனஅழிப்புகளும் எண்ணிலடங்காதவையாகவே இருந்துவருகின்றது.

இனஅழிப்பு தொடர்பில் பல்வேறு தளத்தில் பல்வேறு வகையிலான நீதிக்கோரிக்கைகளும் நினைவேந்தல்களும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. வடகிழக்கு தமிழர் தாயகப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இனஅழிப்புகள் என்பது வரலாற்றுச்சுவடுகளாக நோக்கப்படுகின்றன.

வடகிழக்கு தமிழர் தாயகப்பகுதியில் நடந்த நிகழ்வுகள் வெறும் சிவில் போரின் பக்கவிளைவுகள் மட்டுமல்லாது, ஒரு குறிப்பிட்ட தேசிய இனத்தின் தனித்துவத்தையும் வாழ்வியலையும் முறைப்படியாகச் சிதைக்க முயன்ற திட்டமிட்ட நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவே வரலாற்று ஆசிரியர்களாலும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளாலும் பார்க்கப்படுகின்றன.



இலங்கையில் தமிழர்களுக்கு நடந்த அநீதிகள் முறைப்படியான வரலாற்று கடத்தலாக செய்யப்பட வேண்டும் என்பதுடன் அது தொடர்பிலான நீதிகோர வேண்டிய கட்டாய நிலைமை தமிழர்களுக்கு இருக்கின்றது. குறிப்பாக இன்றைய இளம் தலைமுறையினர் கடந்த கால விடயங்களை ஒரு கசப்புணர்வான விடயமாக கடந்துசெல்லபார்க்கும்நிலைமைஇன்று உணரப்படுவதுடன் பல படுகொலைகள் தொடர்பான விபரங்கள் அறியாத நிலைமையும் இருக்கின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணம் எதிர்கொண்ட பல படுகொலைகளுக்கான நீதிகோரும் வழிமுறைகள் என்பது முற்றாக மறக்கப்பட்ட நிலைமையும் அந்த படுகொலைகளை நினைவுகூரும் செயற்பாடுகளும் கைவிடப்படும் நிலைமையுமே இன்று இருந்துவருகின்றது. இந்த செயற்பாடு எதிர்காலத்தில் கிழக்கில் தமிழர்கள் எதிர்கொண்ட வலிகளை எதிர்கால சமூகம் மறந்துசெல்லும் நிலையை ஏற்படுத்துவதுடன் இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் இலகுவில் தப்பிச்செல்லும் நிலைமையும் காணப்படுகின்றது.கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு எதிரான படுகொலைகளை வெறுமனே யாரும் ஒரு துன்பியல் நிகழ்வாக கடந்துசெல்லவேண்டாம் என்பதே எமது கோரிக்கையாகும்.

மறதி என்பது மனித இயல்பு ஆனால், கூட்டு நினைவுகளும் வரலாற்றில் ஆறாத வடுக்களாக மாறிய நிகழ்வுகளும் ஒருபோதும் அவ்வளவு எளிதாகக் கடந்து போக முடிவதில்லை. இலங்கைத் தீவின் கிழக்கு மாகாணம்—மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைக் கொண்ட வளமான பூமி—35ஆண்டுகாலப் போரிலும் இன மோதல்களிலும் சந்தித்த வடுக்களும் இழப்புகளும் வார்த்தைகளால் விவரிக்க முடியாதவை. கிழக்கில் தமிழ் மக்கள் சந்தித்த படுகொலைகள் நினைவுகளிலிருந்தும் வரலாற்றிலிருந்தும் மறக்கப்பட முடியாதவை.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பகுதியில் இறால் பண்ணைத் தொழிலாளர்கள் உட்பட 80க்கும் மேற்பட்டோர் 1987 இலும், பின்னர் 1991இல் 150க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வும் கிழக்கின் நெஞ்சை உலுக்கிய சோகங்கள். இதேபோன்று மட்டக்களப்பு சத்ருக்கொண்டான், பிள்ளையாரடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 180க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் ஒரே நாளில் படுகொலை செய் யப்பட்டு, உடல்கள் அழிக்கப்பட்ட கொடூரம்.

அம்பாறை மாவட்டத்தில் வீரமுனை பிள்ளையார் ஆலயத்தில்தஞ்சம் புகுந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கொண்டுசெல்லப்பட்டு பலவந்தமாகக் காணாமல் ஆக்கப் பட்டதும் கிழக்கின் வரலாற்றில் கறைபடிந்த பக்கங்கள். வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாகத்தில் தஞ்சம் அடைந்திருந்த ஆயிரக்கணக்கான அகதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கொண்டுசெல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை. அம்பாறை மாவட்டத்தின் திராய்க்கேணியில் 54பேர் படுகொலைசெய்யப்பட்டனர்.இவ்வாறு கிழக்கில் நடந்த படுகொலைகள் நீண்டுசெல்லும்.இந்த படுகொலைகள் தொடர்பில் நான் கடந்த காலங்களில் கட்டுரைகளை எழுதியிருக்கின்றேன்.



ஆனால் இன்று இந்த கட்டுரையினை எழுதுவதற்கு காரணம் கிழக்கில் தமிழர்களுக்கு நடந்த படுகொலைகளைப்பற்றி கதைப்பதற்கு இன்றும் யாரும் அற்ற நிலைமையே காணப்படுகின்றது.இன்று நாங்கள் செம்மணி மனித புதைகுழிகளுக்காக பல்வேறு போராட்டங்களையும் பல்வேறு கவன ஈர்ப்புகளையும் வடகிழக்கில் முன்னெடுக்கின்றோம்.தமிழர்களுக்கு நடந்த அநீதிகளின் ஒரு நேரடி சாட்சியாக இன்று செம்மணி மாறியிருக்கின்றது.இதனை வெளிப்படுத்தி அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தவர்களை நாங்கள் வரவேற்கின்றோம்.செம்மணிபோன்று பல புதைகுழிகள் கிழக்கில் புதைந்து கிடக்கின்றன. அவற்றினையும் தோண்டவேண்டும்.அந்த புதைகளுக்கு பின்னால் உள்ள பலர் இன்றும் நடமாடித்திரிகின்றனர். குறிப்பாக சத்துருக்கொண்டான் படுகொலை,வீரமுனை படுகொலை, திராய்க்கேணி ஆகிய படுகொலைகளில் பங்கெடுத்த பல முஸ்லிம் ஆயுத தாரிகள் இன்றும் நடமாடித்திரிகின்றனர்.

இன்று காத்தான்குடி படுகொலைகளை முஸ்லிம்கள் நினைவுகூருகின்றனர்.கிழக்கில் முஸ்லிம்களுக்கு அநீதி நடைபெற்றுள்ளதாக காட்டுவதற்காக அதனைக் கொண்டு சிலர் சிவில் செயற்பாட்டாளர்கள் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றனர்.ஆனால் கிழக்கில் தமிழர்களுக்கு நடந்த அநீதிகளை பேசுவதற்கு

மட்டு.நகரான்

தமிழர்களாகிய நாங்களே தயாராக இல்லாத நிலையே இருந்து வருகின்றது.

கிழக்கில் தமிழர்களுக்கு நேர்ந்த அநீதிகளை வரலாற்று ரீதியாகவும், சர்வதேச தரத்திலான ஆவணங்களாகவும் மாற்றுவதில் தமிழர்களாகிய நாம் தவறிவிட்டோம். வரலாற்றை எழுதாத சமுதாயம் தன் அடையாளத்தை இழக்கும். இன்று இளைஞர்கள் மத்தியில் இந்த வரலாற்றுச் சம்பவங்கள் பற்றிய விழிப்புணர்வு குறைந்து வருவதற்குக் காரணமே,மூத்த தலைமுறையினரும் தமிழ் தேசியம்சார்ந்து செயற்படும் பலரும் இது பற்றிப் பேசத் தயங்குவதுதான் முக்கிய காரணமாக என்னால் பார்க்கப்படுகின்றது.

கிழக்குமாகாணத்தினைப் பொறுத்த வரையில் கிழக்கில் தமிழர்களுக்கு எதிரான நடந்த அனைத்து படுகொலைகளுக்கும் பக்கபலமாக முஸ்லிம் ஆயுதக்குழுக்களே இருந்துவந்தன.ஜிகாத் உட்பட பல முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் கிழக்கில் தமிழர்களை அழித்துதனி கிழக்கிஸ்தானாக மாற்றுவதற்கான முயற்சிகளை மும்முரமாக முன்னெடுத்ததன் விளைவாகவே கிழக்கில் அத்தனை மனித படுகொலைகளும் நடந்தன.

இன்று வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்டதாக முஸ்லிம்களும் சில சிவில் செயற்பாட்டாளர்களும் சில மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கூறிவரும் நிலையில் கிழக்கிலிருந்து தமிழர்களை கருவறுக்க முன்னெடுக்கப்பட்ட இஸ்லாமிய ஆயுததாரிகள் குறித்து பேசுவதற்கு முற்படுவதில்லை.

இலங்கையின் கிழக்கு மாகாணம் நீண்டகாலமாகத் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் மொழியாலும், புவியியல் ரீதியாகவும் பிணைந்து வாழ்ந்து வந்த ஒரு பிராந்தியமாகும். எனினும், 1980களின் பிற்பகுதியில் உருவெடுத்த ஆயுதப் போராட்டமும், அதனைத் தொடர்ந்து அரசு முன்னெடுத்த பிரித்தாளும் தந்திரோபாயங்களும் இரு சமூகங்களுக்கும் இடையில் பாரதூரமான விரிசல்களையும், மோதல்களையும் தோற்றுவித்தன. இதில் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் மற்றும் ஊர்காவல் படைகளின் தோற்றமும் செயல்பாடுகளும் கிழக்கின் இன உறவில் ஆறாத வடுக்களை ஏற்படுத்தின.



ஒரு சமூகத்தின் வரலாற்றில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் படுகொலைகளுக்கும் நீதி கோருவது என்பது வெறும் கடந்த காலத்தைப் பற்றிய கவலை மட்டுமல்ல அது அச்சமூகத்தின் எதிர்காலப் பாதுகாப்பு, அரசியல் அடையாளம் மற்றும் மனித கண்ணியத்தை உறுதிசெய்வதற்கான அடிப்படைத் தேவையாகும். இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் மூன்று தசாப்த காலப் போரிலும், அரச மற்றும் இஸ்லாமிய ஆயுதக் குழுக்களின் வன்முறைகளிலும் சந்தித்த இழப்புகள் சொல்லொணாதவை. வரலாற்றுப் பக்கங்களில் மறைக்கப்பட முயலப்படும் இந்த படுகொலைகளுக்கான நீதிக்கோரிக்கைகள் சர்வதேச மற்றும் தேசிய மட்டங் களில் ஓங்கி ஒலிக்கப்பட வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் நடைபெற்ற சம்பவங்கள்

தொடர்ச்சி: பக்கம் 18




2024, நவம்பர்,14, ல் நாடாளுமன்ற தேர்தல் இடம்பெற்று தேசிய மக்கள் சக்தி அரசு 159, அதிகப்படியான ஆசனங்களுடன் ஆட்சியை அமைத்தபோது அவர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட பல விடயங்களை செய்யவில்லை என்பது உண்மை.



ஆனால் சில விடயங்களை செய்கின்றனர் என்பதும் உண்மை அதில் ஊழல் வாதிகளை நீதிமன்றில் ஏற்றுதல், போதைவஷ்துக்களை கடத்துபவர்களை கைது செய்தல். ஈஷ்டர் குண்டு தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் கைது செய்யப்படாவிட்டாலும் சில சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டும் இருவர் மரண தண்டனை பெற்றும் உள்ளனர்.

பிரதான எதிர்கட்சிகளான எதிர்க்கட்சித் தலைவர் சஜீத்தலைமையிலான ஐக்கியமக்கள் சக்தி, மகிந்தராஷபக்ஷவின் பொதுஜன பெரமுனை உட்பட இன்னும் சில சிங்கள கட்சிகள் தற்போதைய அரசை வீட்டுக்கு அனுப்ப போவதாக அறிக்கைகளை விடுவதும் சில இடங்களில் போராட்டங்களை செய்து ஆட்சியை குழப்பி ஆட்சியை கவிழ்க்க எவ்வாறான நடவடிக்கைகளையும் அவர்கள் செய்வதற்கு முயற்சிக்கின்றனர்.



இவ்வாறான நிலையில்தான் கடந்த 2026, யூலை,06, நீர்கொழும்பு சிறையில் பாரிய வன்முறை வெடித்ததும் அதில் பலர் கொல்லப்பட்டதும் அதனை தொடர்ந்து 2026, ஆகஷ்ட்,06, ல் வொறளை மகசீன் சிறையில் கலவரம் தீவைப்பு சம்பவம்.

பின்னர் மீண்டும் நீர்கொழும்பு சிறையில் 2027, ஆகஷ்ட்.07, ல் வன்முறை இதேபோல் இரத்தினபுர குருவிட்ட சிறையிலும் வன்முறை.

நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் கோரிக்கைக்கு இணங்க, வட மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா சிறைச்சாலைகளின் தற்போதைய நிலைமைகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் விசேட அவசரக் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இப்படி ஏன் திடீரென சிறைச்சாலைகளில் வன்முறைகள் இந்த வருடம் 2026, ல் தொடர்கிறது என்பதையிட்டு பலரும் பலவிதமான கருத்துக்களை வெளியிடுகின்றன்னர்.

என்னைப்பொறுத்தவரை இதற்கான மூலகாரணங்களாக இரண்டு விடயங்களே உள்ளது என்பதை யூகிக்க முடிகிறது.

1)முதலாவது விடயம் தற்போதைய ஜனாதிபதி அநுரவின் ஆட்சியை கவிழ்க்கும் எதிர்கட்சிகளின் போராட்டங்கள் தென்பகுதிகளில் அவர்கள் நினைத்ததை போன்று செய்ய முடியவில்லை என்னதான் பொருளாதார விடயங்களை காட்டி ஆட்சிக்கு எதிராக கருத்துக்களை கூறினாலும் சிங்கள மக்கள் அதனை முழுமையாக ஏற்க தயாரில்லை.

அதனால் தென்பகுதிகளில் சிறைகளில் உள்ளவர்கள் பலர் கடந்த கால ஆட்சியாளர்களுக்கு பக்கபலமாக இருந்தவர்கள், தற்போதைய எதிர்கட்சிகளுக்கும் ஆதரவானவர்கள் அவர்களை தூண்டிவிட்டு ஆட்சியாளர்களை குழப்ப இவ்வாறு சிறைக்கைதிகளை பயன்படுத்தி இருக்கலாம் என்ற சந்தேகம் எழுவதை சாதாரணமாக மறுதலிக்க முடியாது.

2)இரண்டாவது விடயம் தென்பகுதிகளில் உள்ள சிறைச்சாலைகளில் தண்டனை பெற்ற கைதிகளும், சந்தேக நபர்களாக கைதானவர்களும் அநேகமான அவர்களுடைய குற்றச்செயல்கள் போதைவஷ்த்து பாவனைகள், போதைவஷ்து கடத்தலில் ஈடுபட்டவர்கள்,பல கொலை குற்றச்சாட்டு சந்தேக நபர்கள் இப்படியானவர்கள் போதைவஷ்த்து பாவிப்பவர்களே அதிகம்.

கடந்த கால மகிந்தராஷபக்ஷ, மைத்திபால சிறிசேன, கோட்டபாயராஷபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிகளின் ஆட்சிக்காலங்களில் சிறைச்சாலைகளில் இப்படியானவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் பாவனைக்காக வெளியில் இருந்து போதை பொருட்கள் உறவினர்கள்மூலமாக அல்லது சிறை காவலர்கள் மூலமாக சிறைக்குள் போதைபொருட்கள் செல்வதும் அதனை அவர்கள் பாவித்த வரலாறுகளும் உண்டு.

ஆனால் தற்போதைய தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் சிறைகளில் போதை பொருட்கள் இலகுவாக கொண்டு செல்ல முடியாதவாறு இறுக்கமான கட்டுப்பாடுகள் உள்ளன.

இந்த நிலையில் தொடர்ந்து போதைப் பொருட்களைப்பாவித்தவர்களை திடீரென அந்த பாவனை இல்லாத போது சுய நிலை இழந்து மனம் தளர்ந்து வன்முறைக்கு இட்டுச்செல்கிறது.

வன்முறை தொடக்கம் சக கைதிகளிடையே வாய்த்தர்க்கம், அடிபிடியில் ஆரம்பித்து கோஷ்டி மோதலாக வெடிக்கிறது. இதனை கட்டுப்படுத்த சிறை காவலர்கள் செல்லும்போது அவர்களை எதிரியாக நினைத்து அவர்கள் மீதும் பாரிய தாக்குதல்கள், தீவைத்தல் சிறைச்சாலைகளை உடைத்தல் என்பன சுய நினைவுகளை கடந்து ஏற்படுகிறது.

**பா.அரியநேத்திரன்**



உண்மையில் சிறைச்சாலைகளில் உள்ள போதைவஷ்த்து பாவிக்கும் கைதிகளின் மனோநிலை என்பது எரிச்சல், வெறுப்பு, சினம், கொண்டதாகவே காணப்படும் அவர்கள் சமாதானத்தை விட சண்டையை விரும்புபவர்களாகவே காணப்படுவார்கள் அவர்களிடம் வன்முறைகளை தூண்டினால் இலகுவாக உள்வாங்கி பின்விளைவுகளை நோக்காமல் எந்த தீய செயல்களையும் செய்யக்கூடியவர்கள் என்பதே உண்மை.

இந்த இரண்டு காரணங்களுமே தற்போதைய சிறை வன்முறைகளுக்கு அத்திவாரங்களாக உள்ளன இதனை சாதகமாக எதிர்கட்சிகள் பயன்படுத்துகின்றன.

• • •

## விண்ணை முட்டும்... தொடர்ச்சி...

கருதுகின்றனர்; அதேவேளையில், குடியரசுக் கட்சியினருக்கு நாடாளுமன்ற இடைக்காலத் தேர்தலுக்கு 100 நாட்களுக்கும் குறைவான காலமே எஞ்சியுள்ளது.

உலகளவில் கச்சா எண்ணெய் விநியோகம் மற்றும் சுத்திகரிப்புத் திறன் குறை வாக இருப்பதே எரிபொருள் விலை உயர்வுக்குக் காரணம் என்று ஆய்வாளர்கள் கூறு கின்றனர். அமெரிக்காவின் மூலோபாய எண்ணெய் இருப்பு (strategic oil reserves) 1983-க்குப் பிறகு மிகக் குறைந்த அளவை எட்டியுள்ளது, இதனால் சந்தையைச் சீராக்குவதற்கான இருப்பு அளவு குறைந்துள்ளது. அதே நேரத்தில், மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் நிலவும் மோதல்களால் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாட்டில் இடையூறுகள் ஏற்பட்டுள்ளன; இதனால் அமெரிக்கச் சுத்திகரிப்பு நிலையங்கள் கிட்டத்தட்ட முழுத் திறனுடன் இயங்க வேண்டிய சூழல் உருவாகி, செயலாக்கச் செலவுகள் அதிகரித்துள்ளன, இதுவும் எரிபொருள் விலைகள் உயர்வாக இருக்கக் காரணமாக அமைந்துள்ளது.

## பென்டகன் ... தொடர்ச்சி...

இருப்பினும், தைவான் தொடர்பான பதட்டங்களையும், சீனா மீதான கோல்பியின் கடுமையான நிலைப்பாடுகளையும் காரணம் காட்டி, சீன அதிகாரிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.




# காணி உரிமைக்காகக் குரல் கொடுக்கும் மலையக அரசியல்
## இந்தியாவுடனும் முக்கிய பேச்சுவார்த்தை

மருதன் ராம்

இலங்கையின் மலையகத் தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷைகளான சொந்தக் காணி உரிமை, பாதுகாப்பான வீடமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் ஆகியவை மீண்டும் நாட்டின் முதன்மை அரசியல் உரையாடலாக உருவெடுத்துள்ளன. அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடனும், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரியுடனும் மலையக அரசியல் தலைவர்கள் நடத்திய தொடர் உயர்மட்டச் சந்திப்புகள், இந்த சமூகத்தின் அவசரத் தேவைகளையும் அவர்கள் எதிர்கொள்ளும் நிர்வாகச் சவால்களையும் மீண்டும் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளன.

### ஜனாதிபதி செயலகத்தில் ஒருமித்த வலியுறுத்தல்



பொது விடயங்களில் ஒன்றிணைந்து செயல்படும் நோக்கில் கூட்டிணைந்த தமிழ் முற்போக்கு கூட்டணி (TPA), இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (CWC), இலங்கைத் தமிழரசுக் கட்சி (ITAK), ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி (DTNA), அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ACMC) மற்றும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) ஆகிய ஆறு முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினர். இச்சந்திப்பின் போது தமிழ் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகளால் ஒருமனதாக மூன்று பிரதான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.



இதன்படி, அனைத்து இனங்களின் சமத்துவத்தையும் அதிகாரப் பகிர்வையும் உறுதிப்படுத்தும் புதிய அரசியலமைப்பை உருவாக்குதல். மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்துதல். வடக்கு-கிழக்கு மற்றும் மலையக மக்களுக்கு நீண்டகாலமாக நிலவி வரும் காணி உரிமைப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு வழங்குதல் ஆகிய மூன்று விடயங்களை பிரதானமாகக் கொண்டு அவர்கள் தங்களது கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைத்திருந்தனர். இக்கலந்துரையாடலின் போது மலையகப் பிராந்தியம் மற்றும் பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்து தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள் மிக விரிவாக விடயங்களை முன் வைத்ததுடன் மலையக பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் உடனடி தேவைகள் குறித்தும் அவர்கள் எடுத்துரைத்திருந்தனர்.



தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் இந்த சந்திப்பில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி ராதாகிருஷ்ணன் மற்றும் அந்த கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான துணைத் தலைவர் பரத் அருள்சாமி ஆகியோர், அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் "அட்டன் பிரகடனத்திலும்" வாக்குறுதியளிக்கப்பட்டவாறு மலையக மக்களுக்கு 10 பேர்ச் காணிகளை வழங்கும் திட்டத்தை துரிதகதியில் நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தினர். பெருந்தோட்டக் கம்பனிகளின் தன்னிச்சையான நடவடிக்கைகளும், சில அரச நிறுவனங்களின் பொறுப்பற்ற அணுகுமுறைகளும் மக்களைக் கடுமையாகப் பாதித்து வருவதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.



மாகாண சபைகள் வடக்கு மற்றும் கிழக்கிற்கு மட்டுமல்லாது, நாட்டின் பல மாவட்டங்களில் சிதறி வாழும் மலையக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை உறுதிப்படுத்தவும், அவர்களின் அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தவும் இன்றியமையாத நிர்வாகக் கட்டமைப்பாகும் என்ற விடயத்தையும் இராதாகிருஷ்ணன் எடுத்துரைத்தார். நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களை சுட்டிக்காட்டிய பரத் அருள்சாமி, 'தித்வா' பேரழிவாலும், அண்மைய அடைமழையாலும் பாதிக்கப்பட்ட வட்ட வளை, நாவலப்பிட்டி, அக்கரப்பத்தனை போன்ற பகுதிகளில் வாழும் குடும்பங்களின் அவல நிலையை விவரித்தார்.

காணி உரிமையற்ற சமூகங்கள் இயற்கை அனர்த்தங்களுக்கு எவ்வளவு மோசமாக உள்ளாகின்றன என்பதற்கு இதுவே சான்றாகும் எனக்கூறி, அவர்களுக்கான நிரந்தர வீடமைப்பை அவசர முன்னுரிமையாகக் கருத வேண்டும் என்றும் வலியுறுத்தினார். அதேநேரம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், இந்திய உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத் திட்டங்களின் கீழ் வீடுகள் கிடைத்தபோதிலும், குடிநீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களைச் செலுத்துவது உள்ளிட்ட வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களை மக்கள் எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டினார்.



தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களினது கோரிக்கைகளை கவனமாகக் கேட்டறிந்த ஜனாதிபதி, அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் குறித்து விளக்கமளித்தார். குறிப்பாக மக்களின் காணிகள் மக்களுக்கே சொந்தமாக வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். பெருந்தோட்டக் கம்பனிகளுடன் செய்யப்பட்டுள்ள குத்தகை ஒப்பந்தங்கள் 2042 ஆம் ஆண்டிற்கு முன்னர் புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதால், வெகுவிரைவில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய ஒப்பந்தங்களில் மலையக மக்களுக்கு நிலத்திற்கான சட்டபூர்வ உரிமையை வழங்கும் சரத்துகள் கட்டாயமாக உள்வாங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

அண்மைய காலங்களில் மக்கள் வசிக்காத மலையகப் பகுதிகளில் கூட நில வெடிப்புகள் பதிவாகியுள்ளதைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நிலத்தன்மையின் பாதுகாப்பை உறுதி செய்ய 'மத்திய மலைநாட்டு அபிவிருத்தி அல்லது பாதுகாப்பு அதிகாரசபை' ஸ்தாபிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார். நிலத்தன்மையின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே நிரந்தர வீடமைப்புத் திட்டங்கள் அமுல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டி முடிக்கப்படும் வரை தற்காலிக குடியிருப்புகளும், வாடகை வீட்டுக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். மேலும், மக்களுக்கு பொருளாதார நிவாரணம் வழங்கும் புதிய திட்டங்கள் உருவாக்கப்படும் என்றும், 2027 வரவு செலவுத் திட்டத்தில் இதற்கான நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்

தொடர்ச்சி: பக்கம் 13




A.M.L லம்பேட்

2026ஆம் ஆண்டு பீகார் மாநிலத்தின் பாங்கிபூர் இடைத் தேர்தலில் ஜன் சுராஜ் (Jan Suraaj Party) கட்சியின் நிறுவனர் பிரசாந்த் கிசோர் பெற்ற வெற்றி, இந்திய அரசியலில் ஒரு முக்கிய திருப்புமுனையாகப் பார்க்கப்படுகிறது. ஒரு இடைத்தேர்தல் முடிவை நாடு தழுவிய அரசியல் மாற்றமாகக் கருத முடியாது என்றாலும், பாரதிய ஜனதா கட்சியின் (BJP) நகர்ப்புற வாக்காளர் உத்தி, இளைஞர்களின் அரசியல் எழுச்சி மற்றும் மாற்று அரசியல் சக்திகளின் சாத்தியக்கூறுகள் குறித்து இந்நகர்வு புதிய விவாதங்களைத் தோற்றுவித்துள்ளது.



இந்தியாவின் முன்னணி தேர்தல் வியூக நிபுணராக அறியப்பட்ட பிரசாந்த் கிசோர், தனது ஆலோசகர் என்ற அடையாளத்தைக் கடந்து மக்கள் ஆதரவு பெற்ற அரசியல் தலைவராகத் தன்னைப் பதிவுசெய்துள்ளார். 1995 முதல் BJP யின் கோட்டையாக இருந்த பாங்கிபூரில் 19,000க்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் அவர் பெற்ற வெற்றி, அடையாள அரசியலைத் தாண்டி நல்லாட்சி, வேலைவாய்ப்பு மற்றும் தலைமையின் நம்பகத்தன்மை ஆகியவையே தீர்மானிக்கும் காரணியாக மாறியுள்ளதை உணர்த்துகிறது.



இந்தத் தேர்தல் வெற்றியின் பின்னணியில், நீட்தேர்வுக் கேள்வித்தாள் கசிவு மற்றும் வேலைவாய்ப்பின்மை தொடர்பான மாணவர் போராட்டங்கள் முக்கிய பங்கு வகித்தன. கல்வி நேர்மை மற்றும் வெளிப்படையான நிர்வாகம் குறித்த இளைஞர்களின் கோரிக்கைகள் அரசியல் விவாதத்தின் மையப்புள்ளியாக மாறின. இப்போராட்டங்கள் இளைஞர்களிடையே நிலவிய அரசியல் அதிருப்தியை வெளிப்படுத்தப்பட்டதனை காணமுடியும்.

BJP- க்கு இத்தோல்வி தேசிய அளவிலான பின்னடைவு அல்ல என்றாலும், நகர்ப்புற வாக்காளர்கள் மற்றும் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் எச்சரிக்கையாகும். அதேநேரம், பிற மாநில இடைத்தேர்தல் முடிவுகள் இந்திய அரசியலில் உள்ளூர் சூழல்களே முதன்மை பெறுகின்றன என்பதையும் காட்டுகின்றன.

எதிர்க்கட்சிகளின் பார்வையில், தெளிவான கொள்கை, அடித்தள மக்கள் அமைப்பு மற்றும் வலுவான தலைமைத்துவம் இருந்தால் ஆளும்கட்சிகளுக்குச் சவால் விடுக்க முடியும் என்பதை தேர்தல் முடிவு நிரூபிக்கிறது. எனினும், ஒரு தொகுதி வெற்றி மட்டுமே பெரிய அரசியல் மாற்றத்தை உறுதி செய்யாது; இதனைத் தொடர்ந்து தக்கவைக்க நீண்டகால அரசியல் திட்டமிடல் அவசியமாகும்.




இவ்வெற்றி, நவீன ஜனநாயகத்தின் நிலைத்தன்மை என்பது வெறும் சித்தாந்தப் பிரச்சாரங்களால் மட்டுமல்லாமல், மக்களின் சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அரசு எவ்வாறு தீர்வுகாண்கிறது என்பதிலேயே தங்கியுள்ளது என்பதை நினைவூட்டுகிறது. எதிர்கால பீகார் அரசியலில் இம்மாற்றம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது கட்சிகளின் மறுசீரமைப்பு உத்திகளிலேயே அடங்கியுள்ளது.

• • •

## காணி உரிமைக்காகக் குரல்... தொடர்ச்சி...

### இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரியுடனான பேச்சுவார்த்தை

ஜனாதிபதியுடனான சந்திப்பு இவ்வாறிருக்க இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரியை, கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் (India House) மலையக அரசியல் தலைவர்கள் தனியாகச் சந்தித்தனர். இந்த சந்திப்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விஜயத்தின் போது அறிவிக்கப்பட்ட முன்முயற்சிகள் மற்றும் 'தித்வா' புயல் பாதிப்புகளுக்காக இந்தியா வழங்கிய 450 மில்லியன் அமெரிக்க டொலர் மீள்கட்டமைப்பு நிதியுதவியின் தற்போதைய முன்னேற்றம் குறித்து ஆராயப்பட்டது. அத்துடன் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான மலையகக் குடும்பங்களுக்கு இந்திய அரசின் வீட்டுத் திட்டத்தை அரசாங்கம் தாமதமின்றி முழுமையாக நடைமுறைப்படுத்த வழிவகை செய்ய வேண்டும் என்று இந்திய வெளியுறவுச் செயலாளரிடம் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்தார். இதேவேளை, அரசாங்கம் உருவாக்கத் திட்டமிட்டுள்ள 'மத்திய மலைநாட்டு பாதுகாப்பு அதிகாரசபை' என்ற புதிய நிலைப்பாடு காரணமாக, மக்களுக்கு காணி உரிமை கிடைப்பதில் புதிய சிக்கல்களோ தாமதங்களோ ஏற்பட்டு விடக் கூடாது என்ற கவலையை தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இந்திய செயலாளரிடம் சுட்டிக்காட்டினார்.

மலையக மக்களின் மீள்குடியேற்றமும் காணி உரிமையும் மேலும் தாமதிக்க முடியாத சமூக நீதி சார்ந்த பிரச்சினைகளாகும். நிர்வாக நடைமுறைகளையும் புதிய அதிகாரசபைகளையும் காரணம் காட்டி இச்செயல் முறையைத் தாமதப்படுத்தக் கூடாது என்பதும், அரசாங்கத்திடம் சட்டப்பூர்வ அதிகாரம் இருக்கும் நிலையில் தேவைப்படுவது வலுவான 'அரசியல் மனஉறுதி' மட்டுமே என்பதும் மலையகத் தலைமைகளின் தெளிவான நிலைப்பாடாகும் என்ற விடயமும் இந்த இரு சந்திப்புகளின் போதும் எடுத்துரைக்கப்பட்டது. பல்வேறு உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் மற்றும் வாக்குறுதிகளுக்கு மத்தியில், இந்த நகர்வுகள் வெறும் காகித அளவிலான அறிவிப்புகளாக நின்றுவிடாமல், பல தலைமுறைகளாக நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் மலையக மக்களின் வாழ்வில் உண்மையான உரிமையையும் பாதுகாப்பையும் பெற்றுத் தருமா என்பதை காலமே தீர்மானிக்கும்.

• • •

## சீரற்ற வானிலையால்... தொடர்ச்சி...

பெரும்பாலான இடங்களில் பாதுகாப்பற்ற வகையில் ஆறுகளை அண்டி அமைக்கப்பட்டிருந்த வீடுகளே அதிக பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளன. அத்துடன் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஆபத்தான பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறுமாறு முன்கூட்டியே அறிவித்திருந்ததாக தெரியவருகிறது. எனினும் தங்களுக்கென உரிய இருப்பிடம் கிடைக்காத காரணத்தினால் பலர் ஆபத்து நிறைந்த தங்களது வீடுகளிலேயே இருப்பதாக குற்றச்சாட்டு முன்வைக் கப்படுகிறது.

இவ்வாறான பின்னணியில் இந்த வாரம் பாராளுமன்றத் தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்ட மான் மலையக மக்கள் சார்ந்த முக்கிய பிரச்சினை ஒன்றை வெளிப்படுத்தினார். பாராளுமன்றத்தில் அவர் கருத்துரைக்கையில், "டிட்வா புயலால் பாதிக்கப்பட்டு தற்போது தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளவர்களை தாம் நேரில் சந்தித்து பேசிய போது, காவல்துறையும் தோட்ட நிர்வாகமும் இணைந்து, சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட அபாயப் பகுதிகளுக்கே மீண்டும் செல்லுமாறு அழுத்தம் கொடுப்பதாக தெரிவித்திருந்தார்கள்.

இவ்வாறு மீளக் குடியமர்த்தப்பட்ட பின்னர் ஏதேனும் அனர்த்தம் ஏற்பட்டால், அதற்கான பொறுப்பை யார் ஏற்பது?" என்ற கேள்வியை முன்வைத்தார். ஜீவன் தொண்டமான் தொடர்ந்து உரையாற்றுகையில், "அண்மையில் ஜனாதிபதியை சந்தித்து எங்களுடைய முக்கியமான கோரிக்கைகளை முன் வைத்திருந்தோம். அதில் குறிப்பாக மலையக மக்களுக்கான காணி உரிமை தொடர்பான கோரிக்கையும் உள்ளடங்கியிருந்தது.

ஜனாதிபதியிடம் காணி உரிமை தொடர்பாக பேசும்போது, இயற்கை வளங்களின் பாதுகாப்பு தொடர் பாக கவனம் செலுத்தி பேசியிருந்தார். நான் அதனை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதைவிட எங்கள் மக்களுக்கான காணி உரிமை மிக முக்கியமானதா கும். அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த அமைச்சர் என்ற வகையில், சரியான பதிலை வழங்காமல் மீண்டும் மீண்டும் எதிர்க்கட்சியினரை குறை கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. வீடுகளை மக்களுக்காக கட்டுவதில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்ந்து வந்த அரசாங்கங்களினால் அல்ல; பெருந்தோட்ட நிறுவனங்கள்தான் பிரச்சினை என்பதை புரிந்துகொள்ள வேண்டும்" என்றார்.

# அவுஸ்திரேலிய குடிசன மதிப்பீடும் தமிழர்களும்

Importance of the 2026 Census for the Tamil Community

When completing the Census online or on paper, members of the Tamil community are encouraged to record:

Language Spoken at Home: Tamil

For the ancestry question, please consider entering the following two responses:

Ancestry 1: Tamil

Ancestry 2: Sri Lankan Tamil or Indian Tamil

Recording TAMIL (in box 1) as an ancestry helps to unite Tamils across countries and generations under a shared identity, while country-specific responses such as SRILANKAN TAMIL or INDIAN TAMIL (in box 2) preserve each community's unique background.

Together, these responses provide a more complete picture of "who we are" and help to obtain support for Tamil language schools, interpreting services, aged care, health services, community programs and government funding.

தமிழ்ச் சமூகத்திற்கு 2026 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் முக்கியத்துவம்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பை பூர்த்தி செய்யும்போது, தமிழ்ச் சமூகத்தினர் வீட்டில் உள்ள அனைவருக்கும் பின்வருமாறு பதிவு செய்யுமாறு வேண்டப்படுகிறீர்கள்:

**கேள்வி - வீட்டில் பேசப்படும் மொழி எது ?: TAMIL**

**கேள்வி உங்களது பூர்வீகங்கள் எது ?**

**பூர்வீகம் 1: TAMIL**

**பூர்வீகம் 2: SRI LANKAN TAMIL அல்லது INDIAN TAMIL**

பூர்வீகமாக Tamil என்று பதிவு செய்வது, பல்வேறு நாடுகளையும் தலைமுறைகளையும் சேர்ந்த தமிழர்களை ஒருங்கிணைந்த தமிழ் அடையாளத்தின் கீழ் இணைக்க உதவுகிறது.

அதேவேளை, நாடு சார்ந்த Sri Lankan Tamil அல்லது Indian Tamil என்ற தமிழ் சார்ந்த பூர்வீக பதில்கள் ஒவ்வொரு சமூகத்தினதும் தனித்துவமான பின்னணியைப் பாதுகாக்கின்றன.

இந்தப் பதில்கள் "நாம் யார்" என்பதை மேலும் முழுமையாகப் பிரதிபலிப்பதுடன், தமிழ் மொழிப் பாடசாலைகள், மொழிபெயர்ப்பு சேவை, முதியோர் பராமரிப்பு, சுகாதாரச் சேவைகள், சமூகத் திட்டங்கள் மற்றும் அரசாங்க நிதியுதவிகளை எமது தமிழ் சமூகத்துக்கு பெறவும் பெருமளவில் உதவுகின்றன.

உங்களின் ஆதரவுக்கு நன்றிகள். Thank you for your support







EELAM TAMIL YOUTH
IN PARLIMENT 2026
Empowering the next generation of Eelam Tamil leaders through leadership, advocacy, democratic participation, and meaningful engagement with Australia's parliamentary system.
HOSTED BY
Andrew Charlton MP
Federal Member for Parramatta
PROGRAM HIGHLIGHTS
SCAN TO REGISTER
FOR ENQUIRIES
Kalyani Inpakumar
Hosted by
ANDREW CHARLTON MP


Join Senator
David Shoebridge and other
invited parliamentarians for
an interactive discussion on
leadership, human rights,
democracy and public service.
Additional parliamentarians
will be announced as they are
confirmed.
Senator
David Shoebridge
EELAM TAMIL YOUTH
IN PARLIMENT 2026
Discussion Topics
• Leadership in Public Life
• Human Rights
• Refugee Rights
• Social Justice
• Democratic Participation
• Working Across Parliament
• Creating Positive Change
Young Eelam Tamil leaders are invited to engage in an inspiring discussion with our parliamentarians on leadership, human rights, social justice, refugee rights and pathways to public service.
SCAN TO REGISTER
FOR ENQUIRIES
Kalyani Inpakumar

வாராந்த மின்னிதழ் | இதழ் 403 | அனைத்துலகத்தளம்
சனி, 08 ஆகஸ்ட், 2026 | பக்கம் 17




கடந்த வாரத் தொடர்ச்சி (இறுதிப்பகுதி)

தமிழில்: **ஆர்த்திகன்**

மாணவர் போராட்டத்திற்கு எதிர்க்கட்சிகள் அதிகளவில் ஆதரவு தெரிவித்து வருகின்றன. CJP தலைமையிலான பெரிய அளவிலான போராட்டங்களுக்குப் பிறகு, ஜுலை 21, 2026 அன்று, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மோடியின் இல்லத்திற்கு வெளியே முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அமர்முறைப் போராட்டத்தை நடத்தினார். போராட்டக்காரர்களுக்கு ஆதரவு தெரிவித்த காந்தி, “மாணவர்கள் மீதான தாக்குதல் என்பது ஒவ்வொரு இந்தியக் குடும்பத்தின் மீதான தாக்குதல்” என்று கூறினார்; மேலும், இளைஞர்களின் எதிர்காலமும் தேர்வு முறையே சிதைக்கப்பட்டுள்ளதால்தான் அவர்கள் போராடுகிறார்கள் என்றும் வாதிட்டார். போராட்டத்தின்போது டெல்லி காவல்துறையினரால் தடுத்து வைக்கப்பட்ட காந்தி, பின்னர் அன்று மாலை விடுவிக்கப்பட்டார்.



அடுத்தடுத்த நாட்களில், போராட்ட இடத்தில் கல்வீச்சு மற்றும் காவல்துறை அதிகாரிகள் மீதான தாக்குதல்கள் உள்ளிட்ட மேலும் பல கலவரங்கள் வெடித்தன; இதனால் அப்பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்த அதிகாரிகள் கட்டாயப்படுத்தப்பட்டனர். மத்திய டெல்லியில் மொபைல் இணையச் சேவை நிறுத்தப்பட்டதுடன், போராட்ட இடத்திற்கு அருகிலுள்ள மெட்ரோ நிலையங்களின் நுழைவாயில்களும் மூடப்பட்டன. மும்பை, பெங்களூரு, கொல்கத்தா, கோவா, குவஹாத்தி, திருவனந்தபுரம், ஜம்மு, அகமதாபாத், புனே, லக்னோ மற்றும் நாக்பூர் உள்ளிட்ட நாட்டின் பிற முக்கிய நகரங்களிலும் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

நாடாளுமன்றத்திற்குள்ளும் சலசலப்பான சூழல் நிலவியது. கைது செய்யப்பட்ட போராட்டக்காரர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக, எதிர்க்கட்சியான காங்கிரஸின் சில உறுப்பினர்கள் தங்கள் மணிக்கட்டுகளில் பிளாஸ்டிக் பட்டைகளை (zip ties) கட்டிக்கொண்டனர். அடுத்த நாள், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவைக்குள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தேர்தல் அரசியல் நோக்கங்கள் ஏதுமில்லை என்று வலியுறுத்தும் ஒரு இயக்கத்துடன் தங்களை இணைத்துக்கொள்வதாகத் தோன்றிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்து, தேசிய அளவிலான காங்கிரஸ் தலைமை சற்று விலகி நின்றாலும்; ஆம் ஆத்மி கட்சி, சமாஜ்வாடி கட்சி, திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் சிவசேனா (யுபிடி) போன்ற பிராந்தியக் கட்சிகள் சிஜேபி-யின் (CJP) கோரிக்கைகளுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்துள்ளன.

வெள்ளிக்கிழமையன்று, ஜே.பி. நட்டா மற்றும் ஜிதேந்திர சிங் ஆகியோர் CJP அமைப்பின் முக்கிய செய்தித் தொடர்பாளர் சௌரவ் தாஸ் மற்றும் தேசிய செய்தித் தொடர்பாளர் அசுதோஷ் ரங்கா உள்ளிட்டோருடன் இரண்டு மணிநேரக் கூட்டத்தை நடத்தினர். தலைநகரில் இயல்பு வாழ்க்கையைப் பாதித்துள்ள வன்முறை மற்றும் கொந்தளிப்பான சூழலுக்குத் தீர்வு காணும் முயற்சியாக, இரு தரப்பினருக்கும் இடையே கடந்த இரண்டு நாட்களில் நடைபெற்ற இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தை இதுவாகும். சனிக்கிழமையன்று மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தையை நடத்தவும் அவர்கள் ஒப்புக்கொண்டனர்.



அரசுத் தரப்புத் தகவலின்படி, CJP குழுவினர் தேர்வு முறையைச் சீரமைப்பதற்கான ஐந்து முன்மொழிவுகளுடன் மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தனர். தேர்வு வினாத்தாள் கசிவு விவகாரத்தில் பொறுப்பேற்று கல்வி அமைச்சர் பதவி விலக வேண்டும் அல்லது நீக்கப்பட வேண்டும் என்பது, அத்துடன் தற்கொலை செய்துகொண்ட நீட் (NEET) தேர்வு ஆர்வலர்களின் குடும்பங்களுக்கு 10 மில்லியன் ரூபாய் (1 லட்சம் டாலர்) இழப்பீடு வழங்க வேண்டும் என்பதும், போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீதான காவல் நிலையப் புகார்கள் மற்றும் சட்ட நடவடிக்கைகளைத் திரும்பப் பெறுவதுடன் அவர்கள் மீது இனி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என்ற உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்பதும் இக்குழுவின் முக்கிய கோரிக்கைகளாகும். தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளில் முறையான சீர்திருத்தங்களைக் கொண்டு வருதல், பயிற்சி மையங்களைக் (coaching centers) கடுமையான விதிமுறைகளுக்கு உட்படுத்துதல் மற்றும் நியாயத்தன்மை மற்றும் அணுகல்தன்மையை மேம் படுத்தும் வகையில் நுழைவுத் தேர்வு முறைகளை மறுஆய்வு செய்தல் ஆகியவை அவர்களின் சீர்திருத்த முன்மொழிவுகளில் அடங்கும்.




அடுத்த கூட்டத்தில் குழுவினர் எழுப்பிய பிரச்சினைகளுக்குப் பதிலளிப்பதற்கு முன், அரசு இது குறித்து உள்மட்டத்தில் ஆலோசனை நடத்தும் என்று நட்டா கூறினார். அதேவேளையில், பிரதான் (கல்வி அமைச்சர்) பதவி விலக வேண்டும் அல்லது நீக்கப்பட வேண்டும் என்பதே தங்கள் முதன்மையான கோரிக்கை என்பதில் CJP உறுதியாக இருந்தது.

தாங்கள் அளித்த வாக்குறுதிகளின்படி செயல்பட முடியும் என்பதை உணர்த்தும் வகையில் அரசு சமீப நாட்களில் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வெள்ளிக்கிழமையன்று ANI செய்தி நிறுவனம் வெளியிட்ட தகவல்களின்படி, வினாத்தாள் கசிவு சர்ச்சையைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பெரும் சீரமைப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, தேசியத் தேர்வுகள் முகாமை (NTA) 47 அதிகாரிகளைப் பணியிலிருந்து நீக்கியுள்ளது. சில அதிகாரிகள் மீது சட்ட மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்றும் ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், உயர்கல்வித் துறைச் செயலாளர் வினீத் ஜோஷியை பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்திற்கு அரசு இடமாற்றம் செய்துள்ளது; அதேவேளையில், வினாத்தாள் கசிவு தொடர்பான வழக்குகளை விசாரிக்க நீதிபதி அனு குரோவர் பாலிகாவை டெல்லி உயர் நீதிமன்றம் சிறப்பு நீதிபதியாக நியமித்துள்ளது.

இருப்பினும், வெள்ளிக்கிழமை இரவு நிலவரப்படி, தடுப்புகள் அகற்றப்படவில்லை மற்றும் போராட்டக்காரர்களின் கூட்டமும் குறையவில்லை. நகரின் பரபரப்பான நிலையங்களில் ஒன்றான ராஜீவ் சௌக் உட்பட பதினாறு முக்கிய மெட்ரோ நிலையங்கள் மூடப்பட்டிருந்தன; அப்பகுதியில் அலைபேசி இணைப்பு சேவையும் துண்டிக்கப்பட்டிருந்தது. இதனால் டாக்ஸி சேவைகள், பொருட்கள் விநியோகம் மற்றும் சில்லறை வர்த்தகம் எனத் தலைநகரின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. டெல்லியின் புழுக்கம் நிறைந்த காற்றில் மிதக்கும் கேள்வி என்னவென்றால், இந்த நிகழ்வுகள் போராட்டத்தைத் தணிக்கப் போதுமானதாக இருக்குமா என்பதும், கரப்பான் பூச்சி முகமூடி அணிந்த இளைஞர்கள் இறுதியாகத் தெருக்களிலிருந்து வெளியேறுவார்களா என்பதும்தான்.



தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் என நாடு முழுவதும் இந்தப் போராட்டங்களுக்குப் பின்னாலுள்ள உண்மையான சக்தி மற்றும் இப்போராட்ட இயக்கத்தின் பரந்த நோக்கங்கள் குறித்துக் கடுமையான விவாதங்கள் நடைபெற்று வரும் நிலையில், களத்தில் ‘RT’ ஊடகத்திடம் பேசிய போராட்டக்காரர்களின் நிலைப்பாடு தெளிவாக இருந்தது: அவர்கள் கல்வி முறையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

“ஏழ்மை நிலையில் உள்ள பெரும்பாலான மாணவர்களுக்கு, தங்களையும் தங்கள் குடும்பத்தையும் வறுமையிலிருந்து மீட்டெடுக்கக் கல்வியே ஒரே வழியாக உள்ளது; ஆனால் கல்வி அமைப்பில் ஊழல் மலிந்து, தேர்வு வினாத்தாள்கள் கசியும்போது அந்த கனவுகள் தகர்க்கப்படுகின்றன. அதனால்தான் மாணவர்கள் இதற்கான விளக்கத்தைக் கோருகிறார்கள்,” என்று 23 வயதான அவியான் சவுத்ரி கூறினார். நாடாளுமன்றத்தை நோக்கிய பேரணி வன்முறையாக மாறுவதற்கு முன்பு, திங்கள்கிழமை காலை போராட்டம் நடைபெறும் இடத்தில் கூடியிருந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கூட்டத்தில் அவரும் ஒருவராக இருந்தார்.

உளவியலில் முதுகலை பட்டம் பயின்று வரும் சவுத்ரி, போராட்டத்தில் பங்கேற்பதற்காக உத்தரப் பிரதேசத்தின் சஹாரன்பூரிலிருந்து (160 கி.மீ-க்கும் அதிகமான தொலைவு) தனது நண்பருடன் பயணம் செய்து வந்தார்.

தொடர்ச்சி: பக்கம் 18

## கரப்பான் பூச்சி ... தொடர்ச்சி...

தனது பெற்றோருக்கு இதில் உடன்பாடில்லை என்றாலும், உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவே தான் முடிவு செய்ததாக அவர் ‘RT’ ஊடகத்திடம் தெரிவித்தார்.

கிரேட்டர் நொய்டாவில் உள்ள ஒரு தனியார் பல்கலைக்கழகத்தில் சமூக அறிவியல் பயிலும் இளங்கலை மாணவியான ஸ்வேதா நரான், CJP அமைப்பின் அழைப்பை ஏற்று, ஜூலை 20அன்று காலை 7 மணிக்குத் தனது மூன்று நண்பர்களுடன் (அனைவரும் மாணவர்கள்) போராட்ட இடத்திற்கு வந்தார்.

“மாணவர்களின் கோரிக்கைகள் நியாயமானவை என்பதால், இந்தப் போராட்டத்தில் இணைய நாங்கள் காத்திருந்தோம். இது ஒவ்வொரு இந்திய இளைஞரின் எதிர்காலம் சார்ந்த கேள்வி; இது அரசியல் சார்ந்தது அல்ல,” என்று அவர் கூறினார். மேலும், நீட் (NEET) தேர்வு வினாத்தாள் கசிவு விவகாரத்தைத் தொடர்ந்து தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படும் மாணவர்களுக்கு நீதி கிடைக்கும் வரை தொடர்ந்து போராடப்போவதாகவும் அவர் தெரிவித்தார். “மாணவர்களின் நியாயமான கவலை” என்பது “தனிப்பட்ட நலன்களுக்கோ அல்லது எதிர்க்கட்சிகளின் நலன்களுக்கோ” பயன்படுத்தப்படக்கூடாது என்றும், எந்த வொரு கட்சியும் இதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக்கொள்ளக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்தப் போராட்டம் தனது உத்வேகத்தைத் தக்க வைத்துக் கொள்ளுமா என்பதில் அனைவருக்கும் முழு நம்பிக்கை இல்லை. “இந்த ‘கரப்பான் பூச்சி இயக்கம்’ (Cockroach movement) எங்கே செல்லப்போகிறது?” என்று அரசியல் ஆய்வாளர் சுஹாஸ் பல்ஷிகர் கேள்வி எழுப்பி னார். “ஒருவேளை எங்கும் செல்லாமல் போகலாம் – இது விரக்தியை வெளிப்படுத்த மட்டுமே உதவும், பின்னர் மெல்லக் குறையலாம். விவசாயிகளின் போராட்டத்தைப் போலவே, இது சில வெற்றிகளைப் பெறலாம், ஆனால் காலப்போக்கில் அதன் வேகம் குறையலாம். ‘கரப்பான் பூச்சி இயக்கத்தின்’ கருத்தியல் மற்றும் அரசியல் தன்மை தற்போது நிலையற்றதாக உள்ளது; பல்வேறு சக்திகள் இதில் சவாரி செய்ய முற்படக்கூடும்.”

“இந்தப் பேச்சுவார்த்தைகள் ஒரு சமரசத்திற்கு வழிவகுக்குமா அல்லது முட்டுக்கட்டையை மேலும் தீவிரப் படுத்துமா என்பதைப் பொறுத்தே இது அமையும். ஆனால் ஜந்தர் மந்தரில் வெயிலில் தங்கியிருந்து போராடும் ஆயிரக்கணக்கான இளைஞர்களைப் பொறுத்தவரை, வேறு எந்த முடிவும் சாத்தியமற்றது,” என்று போராட்ட இடத்தில் முகாமிட்டுள்ள பல்கலைக்கழக மாணவியான 19 வயது ஹீனா ஜைன் கூறினார்.

**முற்றும்.**

## அபகரிக்கப்பட்ட ... தொடர்ச்சி...

மேலும், முன்மொழியப்பட்டுள்ள இந்த அரசியல மைப்புத் திருத்தத்தின் மூலம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் அதிகபட்ச எண்ணிக்கையை 19 இலி ருந்து 24 ஆக உயர்த்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## லலித், குகன் காணாமலாக்க... தொடர்ச்சி...

வீர்ராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவாரங்கல் பகுதியில் வைத்துக் காணாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

## முகநூல் நிறுவனம்... தொடர்ச்சி...

செய்யப்போவதாகவும், தனது தளங்களில் இருந்து தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களைக் கண்டறிந்து அகற்றும் பணியில் ஈடுபட்டு வருவதாகவும் மெட்டா நிறுவனம் கூறியுள்ளது.

“இணையத்தில் இளம் பருவத்தினரைப் பாது காப்பதில் எங்களின் சாதனை மீது நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். உண்மைகளைத் திரித்துக் கூறும் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக நாங்கள் தொடர்ந்து எங்க ளைப் பாதுகாத்துக் கொள்வோம்,” என்று அந்நிறுவனம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கின் மீதான இரண்டாவது விசாரணை யின் போது, நீதிபதி மூன்று வாரங்களாக சாட்சியங்களைக் கேட்டறிந்தார். இதில் நடுவர் குழு இடம்பெறவில்லை. நியூ மெக்சிகோ சட்டத்தின் கீழ் மெட்டாவின் தளங்கள் ஒரு “பொது இடையூறை” உருவாக்குகின்றனவா என்பதில் மட்டுமே இந்த விசாரணை கவனம் செலுத்தியது.

தொழில்துறை மட்டத்தில் மாற்றங்களைக் கட் டாயப்படுத்தக் கோரி, மாநிலங்கள், நகராட்சிகள் மற்றும் பள்ளி மாவட்டங்கள் இதேபோன்ற கோரிக்கைகளைத் தொடர்வதால், இந்த வழக்கு அமெரிக்கா முழுவதும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகிறது.







## திராய்க்கேணி புதைகுழி... தொடர்ச்சி...

முஸ்லிம்களின் தாக்குதல் தீவிரமடைய கிராம மக்கள் அருகிலிருந்த பிள்ளையார் கோயிலில் அடைக்கலம் புகுந்தார்கள். கோயிலுக்குள் நுழைந்த முஸ்லிம் குழுக்கள் அடைக்கலம் புகுந்த மக்களை வாள்களால் வெட்டியும் கத்தியாற் குத்தியும் தாக்கினார்கள். இவர்களின் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் அனை வரும் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு முஸ்லிம்கள் தாக்குதல் நடாத்திக் கொண்டிருக்கும் போது கோயிலுக்கு வெளியில் சிறிலங்கா இராணுவத்தினர் பவள் கவச வாகனத்தில் தாக்குதல் நடத்துபவர்களுக்குப் பாதுகாப்பினை வழங்கிக்கொண்டிரு ந்தார்கள்.

தமிழினப்படுகொலை 1956, யூன் ,11, ல், அப் போது மட்டக்களப்பு மாவட்டமாக இருந்த கல்லோயா படுகொலையில் ஆரம்பித்த இனப்படுகொலை 2009, மே,18, முள்ளிவாய்க்கால் வரை 53, வருடங்களாக வடக்கு கிழக்கில் எட்டு மாவட்டங்களிலும் இடம்பெற்றது. அந்த இனப்படுகொலைகளில் தனியே இலங்கை இராணுவம், சிங்கள குண்டர்களுக்கு அப்பால் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் இணைந்து இந்த படுகொலைகளை செய்த னர். அதில் கிழக்குமாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் 1990, ம் ஆண்டு பல படுகொலைகளை செய்தனர் என்பது உண்மை. அதில் திராய்கேணி படு கொலையும் நெஞ்சில் நினைவில் மறக்கமுடியாத ஒன்று.

## ஆறு கட்சிகளின்... தொடர்ச்சி...

விடும் விடயமல்ல. அது மக்களின் வரலாற்று ரீதியான நிலப்பரப்பு, இறைமை மற்றும் சுயாட்சியைப் பாதுகாக்கும் கொள்கை சார்ந்த போராட்டமாகும்.

மனோகணேசன், ரிஷாத் பதியுதீன் போன்ற பிரதான தலைவர்கள் முக்கியமான சந்திப்புகளைத் தவிர்த்து நழுவும் போக்கைக் கடைப்பிடிப்பதும், மறுபுறம் கூட்டணிகள் என்ற பெயரில் அரைவேக்காட்டு உடன்பாடுகளுக்குள் தமிழ் மக்களைத் தள்ளிவிடுவதுமான போக்கு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

தமிழ் பேசும் கட்சிகளாகச் செயற்படுவதற்கு முன்னதாக, தமிழ் தேசியக் கட்சிகள் தங்களுக்குள் இதயசுத்தியான, கொள்கை சார்ந்த கூட்டமைப்பை உருவாக்க வேண்டும். ஒற்றையாட்சிக்குள் தங்களை முடக் கும் 2016-2018 இடைக்கால அறிக்கையை நிராகரித்து, ‘சுமஷ்டி-சுயாட்சி’ என்ற தெளிவான இலக்குடன் செயற்படாத வரை, அநுர அரசாங்கமும், சர்வதேசப் பங்காளிகளும் தமிழ் தலை மைகளைத் தங்கள் அரசியல் சதுரங்கத்தில் வெறும் பகடைக்காய்களாகவே தொடர்ந்து பயன்படுத்துவார்கள் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

## கிழக்கில் தமிழர்... தொடர்ச்சி...

சர்வதேச அளவில் கவனத்தைப் பெற்ற அளவுக்கு, கிழக்கு மாகாணத்தில்அரங்கேறியபலகொடூரமானபடுகொலைகள் உரிய முறையில் ஆவணப்படுத்தப்படாமலும், சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படாமலும் விடப்பட்டுள்ளன. இத்தகைய சம்பவங்கள் நடந்து தசாப்தங்கள் கடந்தும், குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவோ, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உண்மையான நீதி வழங்கப்படவோ இல்லை.

பாதிக்கப்பட்ட தரப்பு தனது நீதிக்கான குரலை உயர்த்தத் தவறினால், அநீதி இழைத்த தரப்பு வரலாற்றைத் தன் வசதிக்கு ஏற்பத் திரித்து எழுதும் அபாயமும் உள்ளது. கிழக்கில் தமிழர்களுக்கு நடந்தவை வெறும் “போரின் பக்கவிளைவுகள்” அல்ல அவை திட்டமிட்ட இனஅழிப்பு நடவடிக்கைகளின் அங்கமே என்பதை வரலாற்றுப் பதிவாக மாற்ற நீதிக்கோரிக்கைகள் மிக முக்கியமானவை.

எனவே, நீதிக்கான பயணம் என்பது உணர்ச்சிப் பூர்வமான பேச்சுக்களோடு நின்றுவிடாமல், முறையான மற்றும் சர்வதேச தரம் வாய்ந்த உத்திகளுடன் முன்னெடுக் கப்பட வேண்டும். நடைபெற்ற படுகொலைகள், சாட்சி யங்கள், திகதிகள் மற்றும் பாதிக்கப்பட்டோரின் விபரங் களைச் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் வழி காட்டல்களுக்கு அமையச் சட்ட ரீதியாக ஆவணப்படுத்த வேண்டும். கிழக்கின் அரசியல் தலைமைகள், மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் அமைப்புகள் இணைந்து நீதிக்கான ஒரு கூட்டுப் போராட்டக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

அதேநேரம், இன்றைய இளைஞர்கள் நவீன டிஜிட்டல் ஊடகங்கள், சர்வதேச மொழிகள் மற்றும் சட்டப் புலமையைப் பயன்படுத்தி, கிழக்கின் அநீதிகளை உல கரங்கிற்குஎடுத்துச்செல்லமுன்வரவேண்டும்.உண்மையான நீதியும் கணக்குக்கூறலும் இல்லாமல் உருவாக்கப்படும் எந்தவொரு நல்லிணக்கமும் தற்காலிகமானதே. கிழக்கு மண்ணில் சிந்தப்பட்ட அப்பாவித் தமிழர்களின் குருதிக்கு நீதி கோருவது என்பது பழிவாங்கும் நடவடிக்கை அல்ல மாறாக, அது இழந்த மனிதக் கண்ணியத்தை மீட்டெடுக்கும் புனிதமான கடமையாகும். தமிழர்களாகிய நாம் நமது கூட்டு மௌனத்தைக் கலைத்து, கிழக்கின் படுகொலைகளுக்கான நீதிக்கோரிக்கையைத் சர்வதேச தளத்தில் உறுதியாகவும் நேர்மையாகவும் முன்னெடுப்பதே, படுகொலையான நமது உறவுகளுக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாகும்.

• • •

## அயலகத்தின்... தொடர்ச்சி...

விஜயம் வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளது.

12 ஆண்டுகளாகத் தள்ளிப்போயுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்றும், 13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்க லான அரசியலமைப்பு விதிகளை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்றும் இந்திய வெளியுறவுச் செயலாளர் மிகத் தெளிவாக வலியுறுத்தினார்.

தமிழ் தேசியக் கட்சிகளுடனான சந்திப்பில், தேர் தலை நடத்த இலங்கை அரசுக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுப்பதாக அவர் உறுதியளித்தார். ஆனால், வெளி விவகார செயலருடனான ஜனாதிபதியின் சந்திப் பிற்குப் பிறகு 10மணிநேர தாமதத்துக்குப் பின்னர் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில், மாகாண சபை தேர்தல் பற்றியோ அல்லது தமிழ் மக்களின் அபிலாசைகள் பற்றியோ இந்தியத் தரப்பு பேசியதாக வார்த்தை கூட இடம்பெறவில்லை. இந்தியாவின் கோரிக்கைகளை இலங்கை அரசு சாதகமாகக் கருதவில்லை என்பதையும், அதனை நாகரீகமாக மறைக்க முயற்சிப்பதையும் இந்த அறிக்கை முரண்பாடு தெளிவாகக் காட்டுகிறது.

இந்தியாவின் அதிருப்திக்கு மற்றுமொரு முக்கிய காரணம், அநுர அரசின் பொருளாதார மற்றும் அரசியல் நகர்வுகளில் காணப்படும் நம்பிக்கையின்மையாகும். தமிழ் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது, இந்தியத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தமது தரப்பில் எவ்வித தாமதமும் இல்லை என்றும், தொடர்பு அதிகாரிகளை நியமிப்பது போன்ற சூசகமான சாக்குப்போக்குகளைக் கூறி இலங்கை அரசாங்கமே இத்திட்டங்களைத் தட்டிக்கழித்து வருவதாகவும் விக்ரம் மிஸ்ரி பகிரங்கமாகவே தனது ஆதங் கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இது இருதரப்பு இராஜதந்திர உறவுகளில் மிக வும் அரிதாக நிகழும் ஒரு நிகழ்வாகும். அநுர அரசு புதுடெல்லியிடம் ஒரு முகத்தையும், உள்நாட்டு அரசியலிலும் பிற வெளிநாட்டுப் பங்காளிகளிடம் வேறு முகத்தையும் காட்டி வருவதை இந்தியா நுட்பமாகக் அவதானித்து வருகின்றது.

இலங்கையின் உள்நாட்டுப் பொருளாதார மறுசீர மைப்பு மற்றும் பிராந்திய வர்த்தக விரிவாக்கம் ஆகிய இரண்டிலுமே இந்திய முதலீடுகளின் பங்கு தவிர்க்க முடியாத ஒன்றாகும். இருப்பினும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது இடதுசாரி மற்றும் தேசியவாத ஆதரவுத்தளத்தை திருப்திப்படுத்துவதற்காக, இந்தியாவுடனான மூலோபாயத் திட்டங்களை வெளிப்படையாக நிராகரிக்கவும் முடியாமல், அதேநேரத்தில் அவற்றை வேகமாகச் செயல்படுத்தவும் விருப்பமில்லாமல் முட்டுச்சந்துக்குள் சிக்கியுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையம், பல்துறை எரிபொருள் உள்கட்டமைப்புத் திட்டங்கள் போன்ற மிக முக்கியமான திட்டங்களில் இலங்கை அரசு காட்டும் மெத்தனப் போக்கு, சர்வதேச முதலீட்டாளர்கள் மத்தியிலும் தவறான சமிக்ஞையை அனுப்பி வைக்கிறது. பிராந்திய வல்லரசுடன் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்களை அமுல் படுத்தாமல் காலம் தாழ்த்துவது, இலங்கையின் நம்பகத்தன் மையையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை, தென்னாசியப் பிராந்தியத்தில் தனது பிராந்தியப் பாதுகாப்பையும் மூலோ பாய நலன்களையும் பாதுகாப்பது முதன்மையான இலக் காகும். குறிப்பாக, இந்தியப் பெருங்கடல் பகுதியில் பிற வெளிநாட்டுச் சக்திகளின் ஊடுருவலைத் தடுப்பதில் இலங்கையின் ஒத்துழைப்பு மிக முக்கியமானது.

ஆனால், அநுர அரசாங்கம் புதுடெல்லியின் பாது காப்புக் கரிசனைகளை வெறும் வார்த்தை அளவிலான வாக்குறுதிகளோடு முடித்துக் கொள்ள முற்படுவதை இந் தியா இனிமேலும் அனுமதிக்கத் தயாராக இல்லை. விக்ரம் மிஸ்ரியின் அதிரடி விஜயமும், தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்களுடனான தனியான சந்திப்புகளும் இலங்கை அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்ட தெளிவான இராஜதந்திர அழுத்தங்களாகும்.

இலங்கை அரசு தனது வாக்குறுதிகளைக் காப்பாற் றத் தவறினால், புதுடில்லி தனது இராஜதந்திர மற்றும் பொருளாதார வழிகளிலான அழுத்தங்களை மேலும் தீவிர மாக்கும் என்பதில் ஐயமில்லை.

அதுமட்டுமன்றி, பொருளாதார நெருக்கடியிலிரு ந்து மீண்டு வர இந்திய உதவிகளைப் பெற்றுக்கொண்டு, அதேவேளையில் இந்தியாவின் மூலோபாய நன்மை களையும் அபிவிருத்தி உடன்பாடுகளையும் கிடப்பில் போடும் அநுர அரசின் உத்தி இனிப்பலிக்காது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது, பாதுகாப்பு உத்தரவாதங்களைப் பேணுவது மற்றும் இந்தியத் திட்டங் களை துரிதப்படுத்துவது ஆகிய விடயங்களில் இலங்கை அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்காவிட்டால், வரும் நாட்களில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் மேலும் விரிசல்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

• • •

## கிருஷாந்தி படுகொலை... தொடர்ச்சி...

திரும்பி வந்துவிட்டார்களோ என்ற நம்பிக்கையுடனும் வேதனையுடனும் பல குடும்பங்கள் செம்மணியில் திரண்ட காட்சிகள், ஈழத் தமிழர் வரலாற்றின் மிகுந்த துயரமான நினைவுகளில் ஒன்றாக உள்ளன.

### செம்மணியின் நினைவுநாள்

கிருசாந்தி படுகொலை, யுத்தத்தின் பெயரில் வடக்கில் என்ன நடந்தது என்பதை உலகிற்கு உணர்த்திய திருப்புமுனையாக அமைந்தது. யாழ்ப்பாணத்தை “விடுவித்தோம்” என்று கூறிய அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பின்னால், கைது, காணாமல் ஆக்குதல், பாலியல் வன்முறை, சட்டவிரோதக் கொலை, இரகசியப் புதைகுழிகள் ஆகியவை இருந்தன என்பதைக் செம்மணி வெளிச்சமிட்டுக் காட்டியது. சில குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டாலும், அந்தக் குற்றங்களுக்கு அரசியல் மற்றும் கட்டளைப் பொறுப்புக்கூறல் முழுமையாக நிலைநாட்டப்படவில்லை. அதன்பின்னரும் தமிழர் மீதான வன்முறைகள் தொடர்ந்தே முள்ளிவாய்க்கால் வரை சென்றடைந்தன.

முப்பது ஆண்டுகளுக்குப் பிறகும் செம்மணி இன்னும் முடிவடையாத வரலாறாகவே இருக்கிறது. மீட்கப் படும் ஒவ்வொரு எலும்புக்கூடும், அடையாளம் காணப்படாத நூற்றுக்கணக்கான காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் கதையை நினைவூட்டுகிறது. அதனால் கிருசாந்தி கொல் லப்பட்ட இந்த நாள், ஒரு மாணவியின் நினைவு நாளாக மட்டுமல்ல; செம்மணியில் புதைக்கப்பட்ட அனைவரையும் நினைவுகூரும் நாளாகவும், இனப்படுகொலைக்கு நீதி கோரும் நாளாகவும் நினைவுகூரப்பட வேண்டும். உண் மையை மறைக்கலாம்; ஆனால் மண்ணுக்குள் புதைக்கப் பட்ட உண்மைகள் ஒருநாள் எலும்புக்கூடுகளாக எழுந்து பேசும் என்பதை செம்மணி மனிதகுலத்திற்கு என்றும் நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

• • •

## இலங்கையின் பல்வேறு... தொடர்ச்சி...

யின்மையில் கைதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக காவல் துறை தெரிவித்துள்ளது. மெகசின் சிறைச்சாலை யில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது காயமடைந்த 11 கைதிகள், சிறைச்சாலை மருத்துவமனையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 09 கைதிகள் வேறொரு சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊட கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரத்தினபுரி - குருவிட்ட சிறைச் சாலையில் ஏற்பட்ட பதற்றத்தில் காயமடைந்த 15 பேர் இரத்தினபுரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர்.

அத்துடன் குருவிட்ட சிறைச்சாலையில் ஏற் பட்ட பதற்றநிலையால் இருவர் உயிரிழந்துள்ளதாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

குருவிட்ட சிறைச்சாலையின் பாதுகாப்பை பலப் படுத்துவதற்காக விசேட காவல்துறை அதிரடிப்படையின ரும், கலகத்தடுப்பு பிரிவினரும் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாக காவல்துறை ஊடகப் பேச்சாளர் தெரி வித்துள்ளார்.

தொடர்ச்சியாக இடம்பெறும் இவ்வாறான சம்பவங் களை அடுத்து நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## ஏமன் படைகள் ... தொடர்ச்சி...

எட்டு ஏவுகணைகளை ஏவியதாக ஏமன் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. உயிரிழந்தோர் மற்றும் காயம டைந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

வியாழக்கிழமை உள்ளூர் நேரப்படி மதியம் 2 மணிக்கு (11:00 GMT) இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அல் ஜசீராவின் ஏமன் விவகாரங்களுக்கான ஆசிரியர் அகமது அல்-ஷலாஃபி தெரிவித்தார். இதில் அரசு இராணுவப் பிரிவுகள், ‘ஹோம்லேண்ட் ஷீல்ட் ஃபோர்சஸ்’ (Homeland Shield Forces), அவசரக்காலப் படைகள் மற்றும் ஹத்ர மௌத்தில் உள்ள முதல் இராணுவப் பிரிவு ஆகியவற் றின் முகாம்கள் தாக்கப்பட்டன. சவூதி ஆதரவுடன் 2022ல் உருவாக்கப்பட்ட, பல்லாயிரக்கணக்கான வீரர்க ளைக் கொண்ட ‘ஹோம்லேண்ட் ஷீல்ட் ஃபோர்சஸ்’ படைப் பிரிவு, மரிப்-ஹத்ரமௌத் எல்லைப் பகுதியையும் சவூதி எல்லையையும் பாதுகாக்கிறது. இப்பிரிவு இந்த ஆண்டின் தொடக்கத்தில் ‘தெற்கு இடைக்கால கவுன்சில்’ (Southern Transitional Council) படைகளுடன் மோதியது.








இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



சி.கிருத்திகா
அன்புவழிபுரம்




பி.ஹர்சினி
பாலையூற்று

## பள்ளி வாழ்க்கை



காலை மணி ஒலிக்க; தூக்கம் கலைக்க;
நீட்டிய கைகளால் புத்தகம் எடுக்க;
அம்மாவின் உரத்தில் கேட்கும் உற்சாகம்
அதுவே என் நாளின் தொடக்கம்...



சீருடை பொலிவில் காணப்படும் நண்பர்கள்
இணைந்து வரும் இனிய விளையாட்டு பாடம்
நண்பர்களுடன் நடந்து செல்லும் சந்தோஷம்
அதுபோல் வாழ்க்கையில் வேறு எதுவுமே
உண்டோ...



அறிவுக்கு கதவாக ஆசிரியர் - நல்
அன்பிற்கு துணையாக மாணவர்- நல்
பாடங்கள் மழையும் விளையாட்டு
பள்ளி நாட்கள் தந்த பொக்கிஷம்...

கண்ணுறங்கா கண்களாக இரவில் ஆசிரியர்
பயணங்களுக்கு துணையாக மாணவர்கள்
வாழ்க்கைக்கு துணையாய் இருக்கும் இவர்கள்
அன்பும் அறிவும் நிறைந்ததே பள்ளி வாழ்க்கை...



யு. தனுஷ்கா
விசுவமடு

## வாழ்க்கை உன் கையில்



எதற்காய் பிறந்தேன்??
உன்னையே கேள்வி கேட்டதுண்டா??
காரணம் இன்றி எதும் இல்லை..

பின்னே நான் ஏன் பிறந்தேன்??
சோம்பல் பிடித்து வீட்டில் இருக்கவா??
பெற்றோர் பணத்தை காற்றில் கரைக்கவா??
ஏன் பிறந்தேன்??

ஏதோ காரியம் என்னால் ஆக வேண்டும்..
ஏன் தீயதை நினைப்பான்..
நல்லதையே நினைப்போம்..

என்னால் எத்தனை பேர் பசியாறுவரோ??
எத்தனை உயிர் காப்பாற்றப்படுமோ??
வீட்டில் முடங்கினால்
தானாக நடந்து விடுமா??



உன்னையே நீ கேட்டுக் கொள்.
ஏன் பிறந்தேன்??
வாய்ப்பு வீடு தேடி வராது..
நீயே உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

நீ சாதிக்கப் பிறந்தவன்..
உன்னையே தட்டிக் கொடுத்துக் கொள்..



ஏன் பிறந்தேன் நான்??
மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்..

யாரோ ஒருவருக்காவது பயன்படாவிட்டால் உடல் எதற்கு??
உயிர் எதற்கு??

மண்ணுக்குள் போகும் வரை உன்னால் இயலுமானதை செய்து
விட்டு மரித்துப் போ..

உலகம் உள்ளவரை
உன் நாமம் அழியாது..
உன் பிறப்பால்
உன் விதியை வெல்வாய்..

வீறு கொண்டு எழு..
நீ பிறந்ததற்காய் மகிழ்ச்சி கொள்..
துவண்டு விடாதே..

வரலாற்றில் உன் எழுத்து
வரலாறு காணாத நாமமாய் ஒலிக்கட்டும்...

ஹப்ஸா க்வில்
பாலையூற்று

 © 2026 இலக்கு இணையம்




# தாயகமும் வாழ்வும்





